வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 04.02.2023 சனிக்கிழமை | இதழ் : 57 | பக்கங்கள் : 16




# வடக்கு - கிழக்கில் இன்று ஹர்த்தால்!

யாழ்ப்பாணம், பெப்ரவரி 04

தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு - கிழக்கில் இன்று சனிக் கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழகங்களின் மாணவர்களின் அழைப்பின்பேரிலேயே இந்த ஹர்த்தால் நடைபெறவுள்ளது. 15



## 108 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன!

யாழ்ப்பாணம், பெப். 04

இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த பகுதியிலிருந்து சுமார் 108 ஏக்கர் காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டன.

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டே நேற்றைய தினம் இந்தக் காணிகள் 15

## 22, 23, 24ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு!

கொழும்பு, பெப். 04

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 22, 23, 24ஆம் திகதிகளில் நடைபெறும் என்று தேர்தல் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இந்தத் தேர்தலை நடத்துவதற்கு எதிராகவும் ஆதரவாகவும் உயர் நீதிமன்றில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றுக்கான தீர்ப்பு எதிர்வரும் 10ஆம் திகதி 15



உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த சுமார் 108 ஏக்கர் காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டன. இவ்வாறு விடுவிக்கப்பட்ட காணிகளில் பாழடைந்த நிலையிலுள்ள வீடு ஒன்று...!

## ஆணைக்குழு உறுப்பினர்கள் இருவர் விலகல்!

கொழும்பு, பெப். 04

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் இரு உறுப்பினர்கள் தமது பதவியை துறந்துள்ளனர்.

மொஹான் சமரநாயக், பி. கே. யு. ஏ விக்ரமசிங்க ஆகியோரே இவ்வாறு தமது பதவியை துறந்துள்ளனர். இவர்கள், இருவரும் தமது இராஜிநாமா கடிதங்களை நிதி அமைச்சின் செயலாளரிடம் கையளித்துள்ளனர்.

ஆணைக்குழுவில் நால்வர் அங்கம் வகித்து வந்த நிலையிலேயே இருவர் பதவி விலகியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 75ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாட்டம்!



கொழும்பு, பெப். 04

நாட்டின் 75ஆவது சுதந்திர தினம் இன்றாகும். இதையொட்டி நாடு முழுவதும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பிரதான நிகழ்வு காலிமுகத்திடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது. காலை 7 மணிக்கு சர்வமத வழிபாடுகளுடன் ஆரம்பமாகும். 7.30 மணிக்கு படையினரின் அணிவகுப்பு நடைபெறும். தொடர்ந்து 8.15 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முதல் பெண்மணி 15

## இன்று பேரணி சகலரும் திரள்க!

யாழ்ப்பாணம், பெப். 04

நாட்டின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்றைய தினம் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு பேரணி ஆரம்பமாகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் பேரணியில் அனைத்து மக்களையும் வேறுபாடுகள் கடந்து இணைய வேண்டும் என்று பல்கலைக்கழங்களின் மாணவர்கள் கேட்டுள்ளனர்.

இதேசமயம், இந்தப் பேரணிக்கு 15

## பொருளாதார வீழ்ச்சிக்கு மகிந்த பொறுப்பாளியல்ல!

### கோட்டாபயவே பொறுப்பு என்கிறார் நாமல்!

கொழும்பு, பெப். 04

“கோட்டாபய அரசாங்கத்தில் எடுக்கப்பட்ட நிறைய தீர்மானங்களில் மகிந்த ராஜபக்‌ஷ சம்பந்தப்பட்டிருக்கவில்லை. நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு மகிந்த பொறுப்புக்கூறத் தேவையில்லை.”

- இப்படி கூறியுள்ளார் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்‌ஷ.

சமகால அரசியல் நிலவரம் 15

## 13ஐ மாற்றமின்றி அமுல்படுத்துக

சென்னை, பெப். 04

இலங்கையில் 13ஆவது திருத்தம் எவ்வித மாற்றமுமின்றி உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு அவசியமான 15

## 13ஆம் திருத்தத்துக்கு வலுக்கிறது எதிர்ப்பு!

கொழும்பு, பெப். 04

13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தென்னிலங்கையில் கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. 15

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023

தமிழ் தேசிய கூட்டமைப்பு

தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

நேற்று இந்தப் பத்தியில் லண்டனின் முக்கிய தமிழரசு தலைவர் ஒருவர் கோபம் கொண்டு சொன்ன சில விடயங்களை எழுதியிருந்தேன். அதனைப் படித்துவிட்டு அந்த பிரமுகரே நேற்று சொன்னார், 'இன்னுமொரு விசயத்தை எழுதாமல் விட்டுவிட்டீர் ஐசே... அண்ணன் அமிர்தலிங்கம் கூட்டம் ஒன்றில் முன்னாள் மன்னார் எம். பி. சூசைதாசனை பேச அழைத்தபோது அவரும் நேரில் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்ததாக அல்லவா அவர் சொல்லியிருந்தார். அண்ணன் அமிர்தலிங்கம் முதன்முதலில் அரசியலுக்கு சூசைதாசனைக் கொண்டுவந்தது எழுபத்தியேழு தேர்தலில். அப்போது நடந்த அந்தக் கூட்டத்தில் பதின்மூன்று வயது சிறுவனாக - றோயல் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த மாணவனாக- அவர் அந்த அரசியல் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தார் எண்டதையும் சேர்த்திருக்க வேணும்..' என்று.

இயேசு பிரான் தனது பத்துக் கட்டளைகளில் பொய்சாட்சி சொல்லாதே என்றுதான் கட்டளை இட்டாரே தவிர, பொய் சொல்லாதே என்று கட்டளை இடவில்லைத்தானே.

இனி இன்று இந்தப் பத்தியில் எழுதவந்த விடயத்துக்கு வருவோம்.

இப்போதெல்லாம் தெற்கு அரசியலில் உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்ற கோஷத்தைக் காணவில்லை. இப்போது அனைவர் கவனமும் இந்த பதின்மூன்றின் மேலேயே இருக்கின்றது. நமது தமிழர் அரசியலில், பதின்மூன்றுக்குள் தமிழர் பிரச்னையை முடக்கப்பார்க்கிறார்கள் என்று சிலர் கோஷம் போட்டுக்கொண்டிருக்க, தெற்கிலோ பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்தினால் நாடு பிளவுபட்டுவிடும் என்ற கோஷம்தான் ஓங்கி ஒலிக்கின்றது.

இது ஒன்றும் தெற்குக்கு புதிய விசயமல்ல. இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோதும் பின்னர், பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தம் வந்தபோதும் இதுபோன்ற கோஷங்கள் தெற்கில் ஓங்கி ஒலிக்கத்தான் செய்தன. ஆனால், அதனை எல்லாம் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கண்டுகொள்ளவில்லை.

இன்றைய விமல், கம்மன்பில போல அன்றும் சிறில் மத்தியூக்களும், லலித் அத்துலத் முதலிகளும் இருந்துகொண்டுதான் இருந்தார்கள்.

அவர்கள் அப்போது ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியிலேயே இருந்தார்கள். அப்போது பிரதான எதிர்க்கட்சியான சிறீ லங்கா சுதந்திரக் கட்சி பலமற்ற நிலையில் இருந்தது. ஆனால், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும் இந்திய இராணுவத்தின் பிரசன்னத்தையும் மிகப்பலமாக எதிர்த்தவர்கள் இடதுசாரிகளான ஜே. வி. பியினரே.

அதுமாத்திரமன்றி, அந்த ஒப்பந்தத்தின் பலனாக தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் நிரந்தரமாகப் பிரிப்பதற்காக இலங்கை நீதிமன்றை நாடி அதன் உதவியோடு பிரித்தவர்களும் இதே ஜே. வி. பியினரே.

ஆனால், இன்று பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்தப் போவதாக ஜனாதிபதி அறிவித்தபின்னர், அதற்கு ஆதரவாக முதல்தடவையாக ஜே. வி. பி. பதிலளித்திருக்கின்றது.

மாகாண சபை முறைமை தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் உள்ளதால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க எம்.பி. தெரிவித்திருக்கிறார்.

நல்லதுதான். ஆனால், தமிழ் மக்கள் மத்தியில் இன்றும் தமக்கென ஒரு சிறிய மக்கள் 'கூட்டத்தை' வைத்துக்கொண்டு அரசியல் செய்பவர்கள் டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண போன்ற இடதுசாரித் தலைவர்கள். ஆனால், அவர்கள் இப்போதும் விமல் - கம்மன்பில போன்றவர்களுடன் கூட்டணி சேர்ந்துகொண்டு அரசியல் செய்வதைப் பார்க்கின்றபோது அவர்கள்மீது கோபம் வரவில்லை. மாறாக அனுதாபமே ஏற்படுகின்றது.

டலஸ் அழகப்பெரும பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணிலை எதிர்த்து போட்டியிட்டவர். அவருக்கு ஆதரவு வழங்குவதென்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்து அவருக்கு ஆதரவு வழங்கியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அவருக்கு ஏன் ஆதரவு வழங்கினீர்கள் என்று தலைவர் இரா. சம்பந்தனிடம் கேட்டபோது, 'அவர் ஓர் இனவாதி அல்ல என்பதால்தான் அவருக்கு ஆதரவு வழங்கினோம்' என்று பதிலளித்திருந்தார்.

ஆனால், சம்பந்தனால் இனவாதி அல்ல என்று சான்றிதழ் கொடுக்கப்பட்ட டலஸ் அழகப்பெருமவும் இப்போது விமல் - கம்மன்பில அணியில்தான் இருக்கின்றார். இனியாவது தேர்தல் அரசியலுக்கு அப்பால், வெளியே வந்து இவர்கள் அரசியல் செய்யவேண்டும்.!

**- ஊர்க்குருவி**

# யாழில் தேசிய சுதந்திர தினம் முன்னேற்பாட்டு கூட்டம் நேற்று!

யாழ்ப்பாணம், பெப். 04

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ள தேசிய சுதந்திர நிகழ்வு தொடர்பான முன்னேற்பாடு தொடர்பில் பல தீர்மானங்கள் எட்டப்பட்டன என்று மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

தேசிய சுதந்திர நிகழ்வு தொடர்பான முன்னேற்பாடு கூட்டத்தின் பின் கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் 75ஆவது சுதந்திர சுதந்திர தினத்தை நினைவுகூரும் முகமாக வருகின்ற 11ஆம் திகதி தேசிய சுதந்திர தின விழா வைபவங்கள் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடுகளை ஜனாதிபதி செயலகத்தின் வட பிராந்திய அபிவிருத்திக்கு பொறுப்பான மேலதிக செயலாளர் எல். இளங்கோவனின் பொறுப்பிலே யாழ்ப்பாண நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

நிகழ்வு சம்பந்தமான முன்னாயத்தக் கூட்டம் இன்று (நேற்று) யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது கூட்டத்தில் இராணுவத்தின் உயர் அதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள், மாகாண பிரதமர் செயலாளர் ,வடக்கு மாகாண ஆளுநர் வட மாகாணத்துக்குட்பட்ட அரசாங்க அதிபர்கள் மெய்நிகர் வழியில் இணைந்தனர்.

நிகழ்வு தொடர்பான பல்வேறு பட்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. காலையில் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம் உத்தியோகபூர்வமாக முறைப்படி கையளிக்கின்ற நிகழ்வையும் மாலையில் கலை நிகழ்வுகளையும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. (ஐ)

# நாட்டின் பணவீக்கம் 54.2 வீதமாக வீழ்ச்சி!

கொழும்பு, பெப். 04

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த ஆண்டு டிசெம்பரில் 57.2 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம் கடந்த ஜனவரியில் 54.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

இதேபோன்று, கடந்த டிசெம்பரில் 64.4 சதவீதமாகப் பதிவான உணவுப் பணவீக்கம் 60.1 சதவீதமாகவும், 53.4 சதவீதமாகப் பதிவான உணவல்லாத பணவீக்கம் 51 சதவீதமாகவும் கடந்த ஜனவரியில் வீழ்ச்சியடைந்தன.

மேலும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெணின் மாதாந்த மாற்றம் கடந்த ஜனவரியில் 0.43 சதவீதமாகக் காணப்பட்டது. இதற்கு உணவு மற்றும் உணவல்லாத பொருட்களின் விலைகளில் முறையே 0.23 சதவீதமாகவும், 0.20 சதவீதமாகவும் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புகள் காரணமாக அமைந்தன.

இதேவேளை ஆண்டுக்கான சராசரிப் பணவீக்கம் கடந்த ஆண்டு டிசெம்பரில் 46.4 சதவீதத்திலிருந்து இவ்வாண்டு ஜனவரியில் 49.6 சதவீதமாக உயர்வடைந் தது.

இந்நிலையில், அண்மையில் பின்பற்றப்பட்டுவரும் இறுக்கமான நாணய மற்றும் இறைக்கொள்கையின் விளைவாக வீழ்ச்சியடைந்துள்ள பணவீக்கமானது இவ்வாண்டு முழுவதும் தொடருமென எதிர்பார்ப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ஐ)

## சுதந்திர தினமான இன்று 588 கைதிகள் விடுதலை!

கொழும்பு, பெப். 04

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அரசமைப்பின் 34ஆவது பிரிவின் கீழ் ஜனாதிபதியால் சிறைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் இருந்து 588 கைதிகள் இன்று சனிக்கிழமை விடுதலை செய்யப்படுவர்.

இதேவேளை, போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறைவைக்கப்பட்டு புனர்வாழ்வு பெற்று வரும் பல கைதிகளுக்கும் ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியுள்ளார்.

மேலும், சிறைத்தண்டனையின்போது நன்நடத்தையுடன் இருந்த 31 கைதிகளும் இன்றைய தினம் விடுதலை செய்யப்படுவர்.

## பிரதேச செயலர்கள் ஊடாக நெல் கொள்வனவுக்கு முடிவு

கொழும்பு, பெப். 04

இந்தப் பெரும்போகத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபை நெல்லைக் கொள்வனவு செய்யாது. மாறாக மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக நெல் கொள்வனவு இடம்பெறும் என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதன்படி, 66 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பெரும்போக பருவ நெல் கொள்வனவுக்காக ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## வசந்த முதலிகேக்கு பிணை; எதிராக மன்றில் மேன்முறையீடு!

கொழும்பு, பெப். 04

வசந்த முதலிகே பிணையில் விடுவிக்கப்பட்டமைக்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்றில் மேன்முறையீடு செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் தயாராகவுள்ளது என்று கூறப்படுகின்றது.

பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அனைத்து பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் வசந்த முதலிகே அண்மையில் விடுவிக்கப்பட்டார்.

இதை எதிர்த்து மேன்முறையீட்டு மனு அடுத்த வாரம் கொழும்பு மேல் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான அறிவிப்பை பொலிஸ் தலைமையகமும் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இணையவழி கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், பெப். 04

நூலக நிறுவனத்தால் நிகழ்த்தப்படும் இணையவழி நிகழ்ச்சித் தொடர் வரிசையில் 64ஆவது நிகழ்வாக "வரலாற்றுப் பார்வையில் வடமேற்கு இலங்கை: ஆய்வும் ஆவணப்படுத்தலும்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறும்.

இக்கலந்துரையாடலை வளர்ந்துவரும் இளம் எழுத்தாளரான வேலும்மயிலும் துவாரகன் நிகழ்த்தவுள்ளார்.

இதில், அனைவரையும் கலந்துரையாடலில் பங்குபற்றி பயனுறுமாறு நூலக நிறுவனம் கேட்டுள்ளது.

கலந்துரையாடலில் பங்கேற்க விரும்புவர்கள் https://us02web.zoom.us/j/81415584070 என்ற இணைப்பை பயன்படுத்த முடியும்.(ஐ)

ஈழநாடு
Eelanadu
04.02.2023 சனிக்கிழமை
பிலவ வருடம், தை 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# 75 வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும்?

இலங்கை சுதந்திரமடைந்து 75 வருடங்களாகி விட்டன. சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் மனவிருப்புடன் கொண்டாடும் நிலைமை இல்லை. இனியாவது அவ்வாறானதொரு சூழல் ஏற்படுமா? அவ்வாறானதொரு சூழலை கடந்த 75 வருடங்களில் ஏற்படுத்த முடியவில்லை. கடந்த 75 வருடங்களில் உலகம் பல்வேறு மாற்றங்களை கண்டுவிட்டது.

உலக ஒழுங்கு மாறிவிட்டது. பனிப்போர் முடிந்துவிட்டது. பனிப்போருக்கு பின்னரான உலகம் மாறிவிட்டது. 1990களிலிருந்து உலகின் ஒரேயொரு சக்தியாக இருந்த அமெரிக்காவின் உலகளாவிய செல்வாக்கில் வீழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. உலகின் கவனிப்பைப் பெற்றிராத சீனா பொருளாதாரத்தில் எழுச்சியடைந்திருக்கின்றது. உலகம் பல துருவங்களாக மாறியிருக்கின்றது. இந்த நிலையில் உலகம் புதிய சவால்களை எதிர்கொண்டிருக்கின்றது.

மாற்றம் ஒன்றே மாறாதது என்பதுதான் உலக இயங்குநிலையின் விதி. ஆனால், இலங்கைத் தீவில் மட்டும் எதுவுமே மாறவில்லை. நாடு ஒரு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்ற நிலையில்கூட தமிழ் மக்களை இரண்டாம்தரமாக நடத்த வேண்டுமென்னும் விருப்பமே மேலிடுகின்றது.

இந்த நாட்டை முன்னோக்கி நகர்த்த வேண்டுமென்னும் சிந்தனை சிறிதளவுகூட சிங்கள ஆளும் வர்க்கத்திடம் இல்லை. ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசியவுடன் அதனை எதிர்ப்பதற்கு வரிந்துகட்டிக் கொண்டு வரும் நிலையில்தான் தென்னிலங்கையின் அரசியல் நிலைமையிருக்கின்றது. அரசியலமைப்பில் இருப்பதைக்கூட அமுல்படுத்தக் கூடாதென்று கூறும் ஒரேயொரு நாடு இலங்கை மட்டும்தான். இவ்வாறானதொரு நாட்டின் எதிர்காலம் தொடர்பில் என்ன கூறமுடியும்?

சிங்கள ஆட்சியாளர் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள் எதனையுமே பொருட்படுத்தவில்லை. இதன் விளைவாகவே தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை நாடினர். இதன் விளைவாகவே வெளிநாடுகளின் தலையீடுகள் நிகழ்ந்தது. இந்தியா அதன் படைகளை இறக்கி அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நிலைமையேற்பட்டது. பல்லாயிரக்கணக்கான உயிர்களின் இழப்புடன் உள்நாட்டு யுத்தம் முடிவுற்றது. யுத்தம் முடிவுற்றாலும் அதன் விளைவுகளின்மீதான அழுத்தங்கள் இன்னும் முற்றுப்பெறவில்லை. இப்போதும், நாடு ஏதோவொரு வகையில் வெளியாரின் தலையீட்டுக்கான வாய்ப்பைக் கொண்டிருக்கின்றது. இதற்கு யார் காரணம்?

இந்த நாட்டை கற்காலத்தில்தான் வைத்திருப்போமென்று அடம்பிடிக்கும் ஒரு காவிக் கூட்டம் அலைந்து கொண்டிருக்கின்றது. அதனைக் கேள்விக்குள்ளாக்க முடியாமல் ஆட்சியாளர்கள் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். கடந்த 75 வருடங்களில் காவிகளை புறந்தள்ளக்கூடிய ஒரு சிங்கள அரசியல்வாதிகூட தென்னிலங்கையிலிருந்து வெளியில் வரவில்லை. இவ்வாறானதொரு நிலையில்தான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகாநாயக்கர்கள் கடிதம் அனுப்பியிருக்கின்றனர். இந்த நாட்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு மகாசங்கத்தால் என்ன செய்யமுடியும்? இந்தக் கேள்வியை கேட்கக்கூடிய வல்லமையுடன் ரணில் விக்கிரமசிங்க இருந்தால் மட்டும்தான் அவர் கூறும் விடயங்களில் அவரால் முன்னோக்கி நகர முடியும்.

# போராட்டத்துக்கு தடை; மறுத்தது நீதிமன்றம்!

*கொழும்பு, பெப். 04*

*அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உள்ளிட்ட தொழில்சங்க செயல்பாட்டாளர்களால் முன்னெடுக்கவிருந்த போராட்டத்தை தடை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு குருதுவத்தை பொலிஸார் விடுத்த கோரிக்கையை கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் நேற்று நிராகரித்துள்ளார்.*

*75ஆவது சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட பொதுமக்கள் பங்கேற்கும் அரச வைபவம் இன்று சனிக்கிழமை காலிமுகத்திடலில் நடைபெறவுள்ளது. இதனால், குற்றவியல் நடைமுறைச் சட்டம்106 (01) பிரிவின் பிரகாரம் இந்தப் போராட்டத்துக்குத் தடை விதிக்க வேண்டும் என பொலிஸ் பொறுப்பதிகாரி கோரிக்கை விடுத்தார்.*

*அரசமைப்பின் 14 ஆவது சரத்து, பொது மக்கள் ஒன்றுகூடுவதற்கும், கருத்துக்களை வெளியிடுவதற்கும், அவர்கள் விரும்பும் இடத்தில் வாழ்வதற்கும் சுதந்திரத்தை வழங்குவதாகக் கூறிய நீதிவான், போராட்டக்காரர்கள் அமைதியை சீர்குலைக்கும் வகையில் நடந்து கொண்டால் குற்றவியல் சட்டம் மற்றும் பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் அதிகாரங்களின்படி செயல்படுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.*

*இந்த சம்பவம் தொடர்பில் குருதுவத்தை பொலிஸார் பிரதிவாதிகளாக முன்னிலை சோசலிச கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ, அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, குணரத்ன தேரர், பொக்குனுவிட பியசோம, ரத்கராவே ஜினரதன தேரர், அனைத்து பல்கலைக்கழக மாணவர் பேரவையின் செயற்குழு அழைப்பாளர் அஞ்சன ரொட்ரிகோ, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் பெனடிக் ஜோசப் ஸ்டாலின் பெர்னாண்டோ, மாற்றம் இளைஞர் அமைப்பின் தேசிய அமைப்பாளர் லஹிரு சதுரங்க வீரசேகர உள்ளிட்ட 30 பேரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டிருந்தனர். (ஐ)*

# இளைஞர், யுவதிகளின் பேரணி வெற்றிபெறட்டும்!

## விக்னேஸ்வரன் எம். பி.

*யாழ்ப்பாணம், பெப். 04*

*இளைஞர், யுவதிகளின் பேரணியை வரவேற்கும் அதே நேரத்தில் அவர்கள் பயணம் பாதுகாப்புடனும் பொறுப்புடனும் வெற்றியுடனும் நடந்தேற வேண்டும் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.*

*யாழ்., கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் இலங்கையின் 75ஆவது சுதந்திர தினமான இன்றைய தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி வடக்கிலிருந்து கிழக்குக்கு இன்றைய தினம் பேரணி நடைபெறவுள்ளது. இந்தப் பேரணி தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

*அத்துடன், பெப்ரவரி 4ஆம் திகதி சிங்களப் பெரும்பான்மையினருக்கு சுதந்திர தினமாக அமையினும், அவ்வாறு அவர்கள் கொண்டாடுவார்கள். எனினும், வட - கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு அது சுதந்திரமற்ற, உரிமைகள் அற்ற, சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு அடிமைப்பட்டிருக்கும் ஒரு நாளாகவே அவர்கள் அதனைப் பார்க்கின்றார்கள். எனவேதான் யாழ். பல்கலைக்கழக மாணவ ஒன்றியமும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும் ஒன்றிணைந்து குறித்த நாளை கரிநாளாக அடையாளப்படுத்தியுள்ளனர்.*

*இவ்வாறு குறித்த நாளைப் பிரகடனப்படுத்த முன் அவர்கள் மக்கள் பிரதிநிதிகள், சிவில் சமூகத்தினர், மதத் தலைவர்கள் போன்றோருடன் கலந்துறவாடிய பிறகே இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*பெப்ரவரி 4ஆம் திகதியன்று வடக்கு - கிழக்கு தழுவிய வர்த்தக சமூகத்தினர், கடற்றொழிலாளர்கள், தனியார் மற்றும் அரச பேருந்து உட்பட அனைத்து தொழிற்சங்கங்களும் தொழில் புறக்கணிப்பிலும் முழுமையான கடையடைப்பிலும் ஈடுபட உள்ளனர்.*




*எமது மனோ நிலையை மன ஏக்கத்தை உலகுக்கு வெளிப்படுத்த இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தினுள் இருந்து சிங்களப் பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தினுள் இந்நாடு 1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதியன்று சென்றமையை சுட்டிக்காட்டும் நாளாக இந்த நாள் அமைகின்றது.*

*ஒற்றையாட்சி மூலம் சிங்களப் பெரும்பான்மையினர் பெற்ற அரசியல் ஆதிக்கத்தை கடந்த 75 ஆண்டுகளாக சிங்கள அரசியல்வாதிகள் கட்டிக்காத்து வருகின்றனர். தந்திரமாக அவர்கள் பெற்றுக்கொண்ட ஒற்றையாட்சி முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டில் வாழும் தமிழ் மக்கள் என்று பூரண அதிகாரப் பகிர்வைப் பெற சிங்கள மக்கள் அனுமதிக்கின்றார்களோ அன்றே தமிழ் மக்களின் விடிவு நாள். அதுவரையில் வருடந்தோறும் பெப்ரவரி நான்காம் திகதி என்ற கரி நாள் வந்து போய்க்கொண்டிருக்கும். நாமும் அன்றைய தினம் எமது மனோ நிலையை வெளிப்படுத்திக்கொண்டேயிருப்போம்.*

*இளைஞர், யுவதிகளின் பேரணியை வரவேற்கும் அதே நேரத்தில் அவர்கள் பயணம் பாதுகாப்புடனும் பொறுப்புடனும் வெற்றியுடனும் நடந்தேற வேண்டும் என்று இறைவனை இறைஞ்சுகின்றேன் - என்றுள்ளது.*

*(ஐ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பெப்ரவரி - 04 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - தை 21
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : சதுர்த்தசி




### மேடம்
திட்டமிட்டு செயல்பட்டு லாபம் காண்பீர்கள். எதிர்பாராத செலவுகள் உண்டாக வாய்ப்புண்டு. துணிச்சலுடன் செயல் பட்டு நெருக்கடிகளுக்கு முடிவு கட்டுவீர்கள். எதிர்பார்த்த வரவுகள் மகிழ்ச்சி தரும்.

### இடபம்
குடும்பத்தில் சில பிரச்னைகள் தோன்றும். எதற்காகவும் உணர்ச்சி வசப்பட வேண்டாம். உங்கள் தன்மானத்தை சீண்டும் வகையில் இன்று சிலர் செயல்படலாம். அமைதி காப்பது நன்மையாகும்.

### மிதுனம்
செயல்களில் குழப்பங்கள் ஏற்படும். திட்டமிட்டு செயல்படுவதால் வெற்றி காண்பீர்கள். உங்கள் செயலை நிறை வேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்வீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும்.

### கடகம்
புதிய முயற்சியில் கவனம் செல்லும். அதில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.எண்ணத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பர செலவுகளில் பணம் கரையும். யோசித்து செயல்படவும்.

### சிம்மம்
நீண்ட நாட்களாக வராமல் இருந்த பணம் வசூலாகும். சொத்துகள் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். நேற்றைய எதிர்பார்ப்புகள் இன்று நிறைவேறும். புதிய நட்புகளால் ஆதாயம் அடைவீர்கள்.

### கன்னி
வியாபாரம் செய்யும் இடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். புதிய முயற்சி லாபம் தரும். வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். உங்கள் அணுகுமுறையால் வருமானம் அதிகரிக்கும்.

### துலாம்
இன்றைய செயல்களில் நீங்கள் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்காமல் போகும். நண்பருக்கு உதவி செய்யப்போய் நீங்கள் சங்கடத்திற்கு ஆளாவீர். நட்புகளிடம் எச்சரிக்கை அவசியம்.

### விருட்சிகம்
மனதை சங்கடப்படுத்தும் வகையில் சில விஷயங்கள் நடக்கும். அமைதி காப்பது நன்மையாகும். நட்புகளிடம் மோதல் உண்டாகும். பிறரது விவகாரங்களில் தலையிடுவதால் பிரச்னை ஏற்படும்.

### தனுசு
நண்பர்கள் வழியே நன்மைகளைக் காண்பீர்கள். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். குடும்பத்தினரின் தேவை களை நிறைவேற்றுவீர்கள். வாழ்க்கைத் துணையின் விருப்பப்படி செயல்படுவீர்கள்.

### மகரம்
உற்சாகமுடன் செயல்படுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். எதிரிகள் உங்களிடம் வந்து சரண் அடைவார்கள். நீங்கள் நினைத்ததை அடைவீர்கள்.

### கும்பம்
குழந்தைகள் வழியே செலவுகள் அதிகரிக்கும். செயல்களில் தடைகளும் தாமதமும் ஏற்படும். குடும்பத்தி னரால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள். மனதில் தேவையற்ற குழப்பம் உண்டாகும்.

### மீனம்
பணியிடத்தில் நெருக்கடிகளுக்கு ஆளாவீர்கள். குடும்பத்தினர் உங்களைப் புரிந்து கொள்ளாமல் போவார்கள். உடல் நிலையில் எதிர்பாராத சங்கடம் தோன்றும். உங்கள் செயலில் பிறர் குறை சொல்வார்கள். மனஅழுத்தம் அதிகரிக்கும்.

# பழனிசாமியும் பன்னீர்செல்வமும் இணைய பா. ஜ. கட்சி வலியுறுத்து!

சென்னை, பெப். 04

எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ. பன்னீர்செல்வம் ஆகியோர் இணைந்து செயல்பட வலியுறுத்தினோம் என்று பா. ஜ. க. மேலிட பொறுப்பாளர் சி. டி. ரவி தெரிவித்தார்.

பரபரப்பான அரசியல் சூழலில் அண்ணாமலை கடந்த புதன்கிழமை டில்லிக்கு அவசரமாக பயணப்பட்டார். டில்லி சென்ற அண்ணாமலை பல தரப்பினரை சந்தித்துப் பேசி தமிழ்நாடு திரும்பினார்.

இந்நிலையில் நேற்று காலை எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வத்தை பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை மற்றும் பா. ஜ. க. மேலிட பொறுப்பாளர் சி. டி. ரவி ஆகியோர் நேரில் சந்தித்து பேசினர்.

இது குறித்து சென்னை தியாகராய நகரில் உள்ள பா. ஜ. க. தலைமையகம் கமலாலயத்தில் செய்தியாளர்களை சந்தித்த பாஜக மேலிட பொறுப்பாளர் சி. டி. ரவி, “தமிழக மக்களுக்கு எதிரான கட்சி தி. மு. க., அந்த அரசு மீது மக்களிடம் நம்பிக்கை இல்லை.

இந்த நேரத்தில் நிலையான, உறுதியான தேசிய ஜனநாயக கூட்டணிதான் தமிழகத்துக்குத் தேவை. தி. மு. கவை எதிர்க்க வேண்டும் என்றால் உறுதியான, நிலையான வேட்பாளர் வேண்டும். தி. மு. கவை வீழ்த்த ஒருங்கிணைந்த அ. தி. மு. க. வேண்டும் என்று வலியுறுத்தினோம். தமிழக நலனுக்காக இணைந்து செயல்படுமாறு எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ. பன்னீர் செல்வத்திடம் கூறினோம். ஒன்றிணைந்து இருந்தால் தி. மு. கவை வீழ்த்த முடியும் என்று கூறினோம். பா. ஜ. க. நிலைப்பாடு குறித்து தெரிவிக்க வரும் 7ஆம் திகதி வரை அவகாசம் உள்ளது.” - என்றார். (ஐ)

# அ. தி. மு. க. இணைப்புக்கு அருகில் நெருங்கிவிட்டோம்!

## சசிகலா கூறுகிறார்

சென்னை, பெப். 04

அ. தி. மு. க. இணைப்புக்கு மிக அருகில் நெருங்கிவிட்டதாக சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த வி.கே. சசிகலா தெரிவித்தார்.

அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா நினைவிடத்தில் சசிகலா அஞ்சலி செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்,” எம். ஜி. ஆர். மற்றும் ஜெயலலிதா ஆகிய இரண்டு தலைவர்களும் சொன்னதை மனதில் வைத்து நம்முடைய செயல்பாடுகள் இருக்க வேண்டும் என நான் நினைக்கிறேன். நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பதுபோல் எல் லோரும் ஒன்றிணைய வேண் டும் என்ற வார்த்தையைதான் இப்போதும் சொல்கிறேன் - எப்போதும் சொல்கிறேன்.

அ. தி. மு. க. இணைப்புக்கு மிக அருகில் நெருங்கி விட்டோம். தனித்தனியாக இருந்தால் அ. தி. மு. க. வுக்கு நல்லது இல்லை. ஒன்றிணைந்து செயல்படுவோம் என்பதுதான் ஆரம்ப காலத்தில் இருந்து இப்போது வரை நான் சொல்வது. ஒன்றிணையும் சூழ்நிலை வந்து விட்டது என்பது எனக்கு தெரிகிறது. இடைத்தேர்தலில் என்னுடைய நிலைப்பாட்டை பொறுத்திருந்து பாருங்கள்.

கடலில் பேனா நினைவுச் சின்னம் வைப்பதை நான் எதிர்க்கிறேன். அதற்கு காரணம் கடலுக்குள் சென்று அதை செய் வது நல்லது இல்லை. இது மீன வர்களை பாதிக்கும் என்பதை திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறேன். அப்படி நினைவு சின் னம் வைக்க வேண்டும் என்று ஆசை இருந்தால் கருணாநிதியின் சமாதியில் நினைவு சின்னத்தை வைக்கலாம் - என்றார். (ஐ)

# எனது மகனின் பணியை தொடர்வதற்கு ஆணை தருக!

## இளங்கோவன் தெரிவிப்பு

ஈரோடு, பெப். 04

என் மகன் திருமகன் ஈவெரா விட்டுச்சென்ற பணிகளை தொடர விரும்புகிறேன் என்று நேற்றைய தினம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்த ஈ. வி. கே. எஸ். இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் வரும் 27ஆம் திகதி நடக்கிறது. இதற்கான வேட்புமனு கடந்த 31ஆம் திகதி தொடங்கிய நிலையில், இதுவரை தே. மு. தி. க, நாம் தமிழர் கட்சி உட்பட மொத்தம் 20 வேட்பா ளர்கள் மனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்நிலையில், தி. மு. க. கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் ஈ. வி. கே. எஸ். இளங்கோவன் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார். இதனைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,”இந்த தேர்தலில் தனிப்பட்ட மனிதர் வெற்றி அடைவதை விட மதச்சார்பற்ற சக்திகளின் வேட்பாளர் வெற்றி பெற விரும்புகிறேன். என் மகன் திருமகன் ஈவெரா விட்டுச் சென்ற பணிகளை தொடர விரும்புகிறேன். மாவட்ட அமைச்சர் முத்துசாமியுடன் இணைந்து ஈரோடுக்கு செய்ய வேண்டிய பணிகள் குறித்து எனது மகன் திருமகன் ஈவெரா பட்டியல் தயாரித்துள்ளார். அதில், பல பணிகளை செய்துள்ளார். மீதம் உள்ளவற்றை மேற்கொள்ள நான் பாடுபடுவேன் - என்றார். (ஐ)

# சிறீரங்கம் ரங்கநாதர் கோயிலின் தேர் திருவிழா!

திருச்சி, பெப். 04

உலகப் புகழ்பெற்ற சிறீ ரங்கம் ரங்கநாதர் கோயிலில் தைத் தேரோட்டம் நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்றது. இக் கோயில் ஆண்டு தோறும் நடைபெறும் தைத் தேர் திருவிழா (நம்பெருமாள் பூபதி திருநாள்) கடந்த 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை நடந்தது. இதற்கென நம்பெருமாள் உபயநாச்சி யார்களுடன் அதிகாலை 3.45 மணிக்கு கண் ணாடி அறையிலிருந்து புறப்பட்டு தைத் தேர் மண்டபத்துக்கு 4.30 மணிக்கு வந்தடைந்தார். அதிகாலை 4.30 மணி முதல் 5.15 மணி வரை ரத ரோஹணம் (தனுர் லக்னத்தில்) நிகழ்ச்சி நடைபெற்றது.

அலங்கரிக்கப்பட்ட தேரில் நம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் எழுந்தருளிய பின் காலை 6 மணிக்கு தேர் வடம் பிடித்து இழுக்கப்பட்டது. தேர் நான்கு உத்திர வீதிகளில் வலம் வந்து பின்னர் தேர் நிலையை வந்தடைந்தது.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு கோவிந்தா நாமம் முழங்க தேரின் வடம் பிடித்து இழுத்தனர். (ஐ)





## “வாக்கு கேட்டு வீட்டுக்கு யாருமே வரவேண்டாம்”

கொழும்பு, பெப். 04

பலாங்கொடை, வலேபொட, மனதுங்கந்த பிரதேசத்தில் வீடொன்றுக்கு முன்பாக காட்சிப்படுத்தப்பட்ட விளம்பரம் பலரது கவனத்தை ஈர்த்துள்ளது.

எதிர்வரும் தேர்தலில் வாக்கு கேட்க வேட்பாளர்கள் இந்த வீட்டுக்கு வர வேண்டாம் என இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விளம்பரம் அந்தப் பகுதியில் உள்ள பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. (அ)

## ரஷ்ய ஆடைஆலையில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு சம்பளம் இல்லை

கொழும்பு, பெப். 04

ரஷ்யாவிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் இலங்கையர்கள் குழுவொன்று தமக்கு இரண்டு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையிலுள்ள வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் அதிக சம்பளம் தருவதாகச் சொல்லி இந்த ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்ய தங்களை அனுப்பியதாக அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

சுமார் 180 இலங்கையர்கள் தற்போது அங்கு பணிபுரிந்து வருகின்றனர்.

தங்களுக்கு டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களுக்கான சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

## புதிய சுற்றறிக்கையினால் தேர்தலுக்கு இடையூறில்லை

### தேர்தல் ஆணைக்குழு கூறுகிறது



கொழும்பு, பெப். 04

மீண்டெழும் செலவுகளை 6 வீதத்தால் குறைத்து வெளியிடப்பட்டுள்ள புதிய சுற்றறிக்கையினால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு இடையூறு ஏற்படாது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தலுக்கான செலவை குறைப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா கூறினார்.

ஏதேனுமொரு வகையில் திறைசேரியிடமிருந்து கோரப்பட்டுள்ள நிதி கிடைக்காமல் போகும் பட்சத்தில், அது பிரச்சினையை ஏற்படுத்தும் என அவர் கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிலையில், குறித்த தொகையை வரவு - செலவுத் திட்டத்தினூடாக விடுவிப்பதற்கு சமீபத்தில் பாராளுமன்றம் அனுமதி வழங்கியது.

2023 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மீண்டெழும் செலவுகளை 6 வீதத்தால் குறைத்தல், அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பில் நிதி பொருளாதார ஸ்திரத்தன்மை, தேசிய கொள்கைகள் அமைச்சினால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.(அ)

# அக்கரையில் கடற்படைக்கு காணிகள் வழங்கமுடியாது!

## பிரதேச செயலகத்தின் நடவடிக்கைக்கு வலி.கிழக்கு தவிசாளர் நிரோஷ் எதிர்ப்பு



யாழ்ப்பாணம், பெப். 04

அக்கரை சுற்றுலாக் கடற்கரையில் கடற்படைக்கு காணி வழங்கப்படுவதற்கு பிரதேச செயலகம் மேற்கொண்ட முடிவை உடனடியாக ஏற்க முடியாது எனவும் அரச காணிகள் தொடர்பான அதிகாரம் மத்திய அரசில் காணப்படினும் அக் காணி உள்ளூராட்சி மன்றத்தின் ஆட்சி அதிகாரத்துக்கு உட்பட்டதாகையால் தனது அனுமதி இன்றி காணியை வழங்க முடியாது என்பதுடன் இராணுவமயப்படுத்தலை ஏற்க முடியாது எனவும் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் அறிவித்துள்ளார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் ஆட்சியில் உள்ள அக்கறை சுற்றுலா மையத்தில் கடற்படையினருக் காணி ஒதுக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலகம் கடிதம் மூலம் பிரதேச சபைக்கு அறிவித்துள்ளது.

அக் கடிதத்தில், இடைக்காடு கிராம அலுவலகர் பிரிவில் உள்ள அக்கரை பிரதேசத்தில் கடற்படை கண்காணிப்பு மையத்தை நிறுவுவதற்கு கடற்படையினர் பிரதேச செயலகத்திடம் 20 பேர்ச் காணியை கோரியுள்ளனர். அதற்கமைய கடற்படை மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தங்களால் சுற்றுலா வலயமாக ஆட்சிப்படுத்தியுள்ள காணியில் இரண்டு பரப்பை கடற்படை கண்காணிப்பு மையம் அமைக்க வழங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து தவிசாளர் என்ற முறையில் சபையின் நிறைவேற்று அதிகாரியான தனக்கே அதிகாரம் உண்டு என்பதை பிரதேச செயலாளருக்கு சுட்டிக்காட்டியுள்ள வலி.கிழக்கு தவிசாளர், படைத் தரப்பிற்கு காணியை வழங்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலகத்தினால் கடற்படையினருக்கு காணி வழங்க எடுக்கப்பட்டுள்ள முடிவை உடனடியாக நிறுத்துமாறும் பிரதேச செயலருக்கு கடிதம் ஊடாக அறிவித்துள்ளார்.

இக் கடிதத்தின் பிரதிகள் ஆளுநர், அரச அதிபர், மாகாண காணி ஆணையாளர் ஆகியோருக்கும் பிரதியிடப்பட்டுள்ளது. குறித்த காணி பிரதேச சபையினால் காலாகாலமாக சுற்றுலாத்துறைக்கு என மில்லியன் கணக்கில் முதலீடு செய்யப்பட்டு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது.

சுற்றுலா மையம் மற்றும் சிறுவர் பூங்காவை உள்ளடக்கிய கடற்கரையாக மக்கள் பாவனையில் உள்ளது. அவ்வாறான பிரதேசத்தில் பிரதேச சபையின் நிறைவேற்று அதிகாரியான தனக்கோ அல்லது பிரதேச சபைக்கோ எதுவித அறிவிப்புக்களும் இன்றி வெளிப்படைத் தன்மையற்ற முறையில் கிராம சேவையாளர், கடற்படையினர் சென்று இரகசியமாக பார்வையிட்டுள்ளனர். இது அரச நிர்வாகத்திற்கு இருக்கவேண்டிய வெளிப்படைத்தன்மையினையும் சட்டம் ஒழுங்கையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

சுற்றுலா வலயம் ஒன்றை இராணுவ மயமாக்குவது அபிவிருத்திக்கு முரணான விடயமாகும் எனவும் தவிசாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையும் மீறி அதிகாரிகள் நடந்து கொள்வார்கள் ஆயின் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஒரு புறத்தில் அரசாங்கம் படைத் தரப்பினரிடம் உள்ள நிலங்களை விடுவிப்பதாகவும் மறுபுறத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களையே மீறி அவர்களுக்குச் சொந்தமான காணியை படைத்தரப்பின் தேவைகளுக்கு அபகரிப்பதாகவும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

## ஒரு தரப்பினருடன் மாத்திரம் தீர்வு குறித்துப் பேசக்கூடாது!

கொழும்பு, பெப். 04

ஜனாதிபதி ஒரு தரப்பினரை மட்டும் முன்னிலைப்படுத்தி தேசிய இனப் பிரச்னைக்கான தீர்வை காண எத்தனிப்பதை விடுத்து பாதிக்கப்பட்டுள்ள சகல சிறுபான்மை சமூகங்களும் நன்மையடையும் விதத்தில் உரிய தீர்வைக் காண்பதுவே உகந்தது - இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான துணை இராஜாங்க செயலாளர் விக்ரோறியா நூலண்டை சந்தித்தபோதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

மேலும், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அரசாங்கம் கையகப்படுத்தியுள்ள காணிகள் அவற்றின் உரிமையாளர்களுக்கு மீள வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் இந்த சந்திப்பில் தெரிவித்தார். (ஐ-6)





## வவுனியாவில் மழையால் 23 குடும்பங்கள் பாதிப்பு

வவுனியா, பெப். 04

வவுனியாவில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழை காரணமாக 23 குடும்பங்களைச் சேர்ந்த 63 பேர் பாதிப்படைந்துள்ளதுடன் 02 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

குறிப்பாக திருநாவற்குளம், மகாறம்பைக்குளம், வெங்கலச்செட்டிக்குளம், பிரமநாலங்குளம் உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்துள்ளதுடன் சில வீதிகளும் வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றன.

இதேவேளை, அறுவடைக்கு தயாராக இருந்து நெற்பயிர்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வவுனியா நகரில் நேற்று முன் தினம் காலை முதல் நேற்றுக் காலை வரையான 24 மணித்தியாலயத்தில் 189.2மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வவுனியா வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பாராளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பமாகும் நாளில் செலவுகளைக் குறைக்க பணிப்புரை

கொழும்பு, பெப். 04

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது புதிய கூட்டத்தொடர் எதிர்வரும் 8ஆம் திகதி உத்தியோக பூர்வமாக ஆரம்பமாகவுள்ள நிலையில், அக்கிராசன உரை நிகழ்த்த வருகை தரும் ஜனாதிபதிக்கு வழமை போன்று வழங்கப்படும் மரியாதை வேட்டுக்கள் மற்றும் இராணுவ அணிவகுப்பு மரியாதை ஆகியவற்றை நடத்த வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்ற உயர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் குதிரைப்படை அணிவகுப்பு மற்றும் பவனிகளை நடத்த வேண்டாம் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் செலவுகளை கட்டுப்படுத்தும் வகையில் எளிமையான முறையில் அந்த வைபவத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார். (அ)

# சுதந்திர தின கொண்டாட்டங்களை ஏற்கும் மனநிலையில் மக்களில்லை

## நாலக கொடஹேவா சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 04

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சர்வதேசத்திடம் யாசகம் பெற்று சுதந்திர தினத்தை வெகு விமரிசையாக கொண்டாட வேண்டுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த சுதந்திர தினக் கொண்டாட்டங்களை ஏற்றுக் கொள்ளும் மன நிலையில் நாட்டு மக்கள் இல்லை. எனவே அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தின் வரிச் சீர்த்திருத்த கொள்கையால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மாதம் ஒரு இலட்சம் சம்பளம் பெறும் அந்த சம்பளத்தின் ஊடாக வீட்டுக் கடன், வாகன கடன் ஆகியவற்றை சமாளித்து வந்த நிலையில் அரசாங்கம் ஒரே கட்டமாக வரி கொள்கையை அமுல்படுத்தியுள்ளதால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உயர் சம்பளம் பெறும் துறைசார் நிபுணர்களுக்கு வெளிநாடுகளில் அதிக கேள்வி காணப்படும் நிலையில் அவர்கள் நாட்டுக்காக சேவையாற்றினார்கள். அரசாங்கத்தின் முறையற்ற வரிக் கொள்கையினால் துறைசார் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுவது பொருளாதார நெருக்கடியை தீவிரப்படுத்துமே தவிர மேம்படுத்தாது.

குறுகிய காலத்தில் அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான நிபந்தனையாக உள்ளது. அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு கடுமையான முறையில் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரச செலவுகளை குறைத்துக் கொள்ளவேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தியதை அரசாங்கம் கவனத்திற் கொள்ளவில்லை. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் 200 மில்லியன் ரூபா சர்வதேசத்திடம் யாசகம் பெற்று சுதந்திர தினத்தை கொண்டாட வேண்டுமா? சுதந்திர தினத்தை கௌரமாகவும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடும் நிலையில் நாட்டு மக்கள் இல்லை. அரசாங்கத்திற்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து வீதிக்கு இறங்கவேண்டும்.

பாராளுமன்றத்தில் அக்கிராசன உரையாற்ற வேண்டும் என்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைத்துள்ளார். பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டதால் 50 இற்கும் அதிகமான பாராளுமன்ற குழுக்கள் கலைக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற குழுக்களை மீண்டும் நியமிக்க வேண்டுமாயின் பாரிய நிதி செலவாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச செலவுகளை கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மாறாக பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைத்து பாராளுமன்ற செலவுகளை பல மடங்கு பெருப்பித்துள்ளார் - என்றார்.

(அ)

# ஜனாதிபதி ஆலோசகராக மீண்டும் ஆஷூ மாரசிங்க

கொழும்பு, பெப். 04

பாராளுமன்ற விவகாரங்களுக்கான ஜனாதிபதி ஆலோசகர் பதவியில் இருந்து விலகிய பேராசிரியர் ஆஷூமாரசிங்கவை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

ஆஷூமாரசிங்கவின் காதலியான ஆதர்ஷா கரந்தனாவின் வளர்ப்பு நாயை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியதாக குற்றம் சாட்டி சமூக ஊடகங்களில் வீடியோ ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

இதனையடுத்து, பேராசிரியர் ஆசு மாரசிங்க தனது பதவியை இராஜினாமா செய்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுடன் இணைந்து ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை ஆதர்ஷா கரந்தனா நடத்தி குறித்த மிருக துஷ்பிரயோகம் தொடர்பில் ஆஷூமார சிங்க மீது குற்றம் சுமத்தியிருந்தார்.

இதனையடுத்து ஹிருணிகா பிரேமச்சந்திரவிடம் 500 மில்லியன் ரூபாவும், ஆதர்ஷ கரந்தனவிடம் ஒரு பில்லியன் ரூபாவும் கோரி ஆஷூமாரசிங்க வழக்குத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கடவுச்சீட்டை வீட்டிலிருந்தே பெற்றுக்கொள்ள புதிய வசதி

கொழும்பு, பெப். 04

கடவுச்சீட்டுகளை விண்ணப்பதாரியின் முகவரிக்கே தபால் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி கடவுச்சீட்டுக்களை விண்ணப்பதாரர்களின் நிரந்தர முகவரியில் மட்டுமின்றி தற்காலிக வசிப்பிடத்தின் முகவரிக்கும் அவற்றை தபால் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பதாரர்கள் தங்கள் கடவுச்சீட்டைக் கொண்டு வர வேண்டிய தற்காலிக முகவரியையும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட வேண்டும் என குடிவரவு மற்றும் தேசிய கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்கும்புர தெரிவித்தார்.

பிரதேச அலுவலகங்களிலும் இதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார் .

(அ)

# யூரியா உரம் கொள்வனவுக்கு பத்து பில்லியன் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, பெப். 04

எதிர்வரும் சிறுபோகத்தின் போது, நெல் மற்றும் சோளம் செய்கைக்காக யூரியா உரத்தை கொள்வனவு செய்வதற்கு பத்து பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தற்போது, உர மற்றும் வர்த்தக உர நிறுவனங்களுக்கு சொந்தமான களஞ்சியசாலைகளில் 30 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம் காணப்படுகிறது. அதனைத் தவிர, மேலும் 25 ஆயிரம்மெற்றிக் தொன் யூரியா உரம் கொள்வனவு செய்யப்படவுள்ளது. இதற்கென பத்து பில்லியன் ரூபா ஒதுக்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு லட்சம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை கையிருப்பில் வைத்துக் கொண்டு, சிறுபோகத்தில்நெல், சோளம் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கான யூரியா உரம் பகிர்ந்தளிப்பது நோக்கமாகும். சிறுபோக நெற் செய்கைக்காக சேதனப் பசளை, பண்டி, யூரியா உரவகைகளை, தட்டுப்பாடின்றி விவசாயிகளுக்கு வழங்குவது விவசாய அமைச்சின் எதிர்பார்ப்பாகும்.

ஆரம்ப உரமான சேதனப் பசளை, சிறுபோகத்தின் ஆரம்பத்திலேயே விவசாயிகளின் தேவைக்கேற்ப, முழுமையாக இலவசமாக வழங்கப்படவுள்ளது.

36 ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தை ஏற்றிய கப்பல் இந்த மாத நடுப்பகுதியில் துறைமுகத்தை வந்தடையவுள்ளது- என்றார். (அ)

# ராஜபக்ஷக்கள் சொகுசு வாழ்க்கை! நாட்டு மக்கள் மீது அதிக வரிச்சுமை!!

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 04

ராஜபக்ஷக்கள் சொகுசு வாழ்க்கை வாழும் போது அப்பாவி மக்கள் மீது வரிச் சுமையை சுமத்துவது நியாயமற்றது என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற் ஸ்ரீநும் கப்ரால், பிபி.ஜயசுந்தர ஆகியோரின் தவறான பொருளாதார தீர்மானங்களால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது.

வைத்தியர்கள், விசேட வைத்தியர்கள் உள்ளிட்டோர் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர். வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியில் செல்வதால் இலவச சுகாதார சேவை பாரிய நெருக்கடிக்குள் உள்ளாகின்றது.

தகவல் தொழிநுட்பத் துறையில் 30 வீதமானோர் கடந்த இரு ஆண்டுகளுக்குள் நாட்டை விட்டு முற்றாக சென்றுள்ளனர். கட்டுமானத் தொழிற்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. பொறியியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகிறார்கள், அறிவார்ந்தவர்கள் நாட்டைவிட்டு வெளியேறினால், நாடு படித்த மனிதவளமற்ற பாலைவனம் போல மாறிவிடும்.

எரிபொருள், மின்கட்டணம் உள்ளிட்ட சேவைக் கட்டணம் தாங்கிக்கொள்ள முடியாத வகையில் உயர்ந்துள்ளது. உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்படாத நிலையில் தேசிய மட்டத்தில் எரிபொருளின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருளின் விலை அதிகரிப்பு ஏனைய சேவைத் துறைகளின் விலை அதிகரிப்பை தீர்மானிக்கும்.

வரிக்கொள்கையை அரசாங்கம் மாற்றியமைக்க வேண்டும். இல்லாவிட்டால் அரசுக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் மேலும் தீவிரமடையும் - என்றார். (அ)

# கரு ஜயசூரியவுக்கு விருது

கொழும்பு, பெப். 04

சுதந்திர தினத்தை முன்னிட்டு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு இலங்கையின் உயரிய தேசிய விருதான சிறிலங்காபிமன்ய விருது வழங்கப்பட்டது.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விருதை கரு ஜயசூரியவுக்கு வழங்கினார்

2018 ஆம் ஆண்டு அரசியலமைப்பு நெருக்கடி ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் முக்கிய பங்கு வகித்தமைக்காக இந்த விருது வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மதிப்புமிக்க விருதை பெறும் எட்டாவது நபர் என்ற பெருமையை 82 வயதான முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய பெற்றுள்ளார்.

1986 இல் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச இந்த விருதினை முதன்முதலிலும், 2017 ஆம் ஆண்டு டபிள்யூ. டி. அமரதேவ இறுதியாகவும் இந்த விருதினைப் பெற்றிருந்தனர். (அ)

# மின் கட்டணத்தைக் குறைக்குமாறு நீர்கொழும்பில் மக்கள் போராட்டம்

கொழும்பு, பெப். 04

மின்சார கட்டணத்தை குறைக்குமாறு வலியுறுத்தி நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் நீர்கொழும்பு பெரியமுல்லை சந்தியில் தீப்பந்தம் ஏந்தி மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததோடு எதிர்ப்பு கோஷங்களையும் எழுப்பினர்.



மின்சார கட்டணத்தை குறைக்குமாறும் விலைவாசியை குறைக்குமாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பியதோடு ரணில் ராஜபக்ஷ அரசாங்கம் வீடு செல்ல வேண்டுமெனவும் வலியுறுத்தினர். இந்த எதிர்ப்பு நடவடிக்கையை நீர்கொழும்பு மக்கள் சபை அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

(அ)

# வழங்கிய கடன்களை மறுசீரமைக்க தயார்!

## பத்திரப்பதிவுதாரர்கள் அறிவிப்பு

கொழும்பு, பெப். 04

இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்களை மறுசீரமைக்கத் தயாராக இருப்பதாக பத்திரப் பதிவுதாரர்கள் சர்வதேச நாணய நிதியத்துக்கு அறிவித்துள்ளனர்.

அத்துடன், இலங்கை அதிகாரிகளுடன் வழிகாட்டுதல் குழு மூலமாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தயாராக இருப்பதாக பொன்ட் ஹோல்டர்ஸ் குரூப் என்ற இலங்கை பத்திரதாரர்களின் குழு உறுதிப்படுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குனர் கிறிஸ்டினா ஜோர்ஜீவாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்த உறுதிப்பாட்டை இலங்கை பத்திரதாரர்களின் தற்காலிக குழு தெரிவித்துள்ளது.

தற்போதைய நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் தங்கள் உத்தியோக பூர்வ கடனாளிகளுடன் இலங்கை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதை இலங்கை பத்திரதாரர்களின் குழு ஏற்றுகொண்டுள்ளது.

அத்தகைய ஈடுபாட்டின் விளைவாக, இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கும் பங்களிப்பதற்கும் உறுதியளிக்கும் வகையில், இந்திய அரசாங்கம், 2023 ஜனவரி 16 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் ஊடாக தெரிவித்திருப்பதையும் பத்திரதாரர் குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

அதேபோன்று, இலங்கையின் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்கவும் மற்றும் சர்வதேச மூலதனச் சந்தைகளுக்கு நாடு மீண்டும் அணுகலை வழங்கவும், இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி தயாராக இருப்பதாக அந்தக் குழு குறிப்பிட்டுள்ளது. (அ)



## இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட ஜப்பான் தொடர்ந்து ஆதரவளிக்கும்

கொழும்பு, பெப். 04

இலங்கையின் நல்லிணக்கத்துக்கு ஆதரவளிப்பதற்கான முயற்சிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜப்பானின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் டகேசுன்சுகே இதனை தெரிவித்தார்.

இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு 100 மில்லியன் ஜப்பான் யென்னை வழங்கவுள்ளதாக அவர் கூறினார்.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுடனான சந்திப்பின்போது ஜப்பானிய அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அரசாங்கம் வடக்கு-கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களில் 95 வீதமானவர்களை அவர்களுக்குரிய நிலங்களில் மீளக்குடியமர்த்துவதற்காக அயராது முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என நீதியமைச்சர் தெரிவித்தார். (அ)

## தேசிய கொடி விற்பனை வீழ்ச்சி!

கொழும்பு, பெப். 04

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்தநிலையில், தேசியக் கொடி விற்பனையில், வீழ்ச்சியை அவதானிக்க முடிந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் பெரும்பாலான நகரங்களில், தேசியக் கொடி விற்பனை செய்யப்படுகின்றது.

எனினும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு தேசியக் கொடி விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

# மேலதிக நீரை இனிமேல் விநியோகிக்க முடியாது!

## மின்சார சபைக்கு அறிவித்த மகாவலி அதிகார சபை

கொழும்பு, பெப். 04

பெரும்போகம் மற்றும் சிறுபோகத்துக்கான தேவையை கருத்திற்கொண்டு மேலதிக நீரை விநியோகிக்க முடியாதென மகாவலி அதிகார சபை, மின்சார சபைக்கு அறியப்படுத்தியுள்ளது.

அந்த அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் பொறியிலாளர் டி.எம்.என்.ஜே தனபால இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறியப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மின்னுற்பத்திக்கு மேலதிக நீர் கிடைக்கப் பெற்றதன் காரணமாக கடந்த 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் மின் விநியோகம் துண்டிக்கப்படவில்லை.

எனினும், உரிய மழைவீழ்ச்சி கிடைக்கபெறாமையால், மேலதிக நீர் சேமிக்கப்படவில்லை.

இதன் காரணமாக, பெரும்போகம் மற்றும் சிறுபோகத்துக்கு தேவையான நீர்ப்பாசனம், குடிதண்ணீர், மற்றும் விளைச்சலுக்கு அவசியமான நீரைக் கருத்திற்கொண்டு நீரை விநியோகிக்க தீர்மானித்ததாக மகாவலி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இதுவரை, மகாவலி கங்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய நீர் மின்னுற்பத்திக்காக பயன்படுத்தப்படும் நீர்த்தேக்கங்களில் 73 சதவீதமான நீர் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், நீர் மின்னுற்பத்திக்காக 50 சதவீதமான நீரையே பெற முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எரிபொருள் இன்மையால் நேற்று முன்தினம் முதல் நிறுத்தப்படவிருந்த களனிதிஸ்ஸ மின்நிலையத்திற்கு 1.3 மில்லியன் லீற்றர் நெப்தா எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது.

கனியவளக் கூட்டுத்தாபனத்தினால் இந்த எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஒரே குடும்பத்தில் மூவருக்கு ஐந்து நீல இரத்தினக்கற்கள்!

கொழும்பு, பெப். 04

கதிர்காமம் - கொச்சி பத்தான பகுதியில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு, 5 நீல இரத்தினக் கற்கள் கிடைத்துள்ளன.

கதிர்காமம் யாத்திரைக்குச் செல்லுபவர்களுக்காக, பூசைத் தட்டுகளை விற்பனை செய்யும் மூன்று வர்த்தகர்களுக்கே, 5 நீல இரத்தினக்கற்கள் கிடைத்துள்ளன.

கதிர்காமம் - கொச்சிபத்தான பகுதியில் அண்மைக் காலமாக, இரத்தினக்கல் தோண்டும் பணிகள் இடம்பெறுகின்றன.

இந்தநிலையில், மூன்று பேருக்கு 5 இரத்தினக்கற்கள் கிடைத்ததை அடுத்து, அந்த இடத்துக்கு செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மூவருக்கும் கிடைத்த 5 இரத்தினக்கற்களும், எலஹர பிரதேசத்தில் உள்ள வர்த்தகர் ஒருவருக்கு, சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## நிர்மாணத்துறை சார்ந்தோருக்கு நிவாரணம் வழங்குவதற்கு முடிவு

கொழும்பு, பெப். 04

கோவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள நிர்மாணத் துறையில் உள்ளோருக்கு நிவாரணம் வழங்குவதற்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய நிர்மாண சங்க பிரதிநிதிகளுடன் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளுமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் விதிகளின் கீழ், நிர்மாண நடைமுறை அபிவிருத்தி அதிகார சபையானது நிர்மாணத் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையாக மாற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கம் நிர்மாணத் துறையின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துதல், பதிவு செய்தல், முறைப்படுத்துதல் மற்றும் தரப்படுத்துதல் ஆகும்.

நிர்மாணத்துறையில் பணியாற்றும் 13 இலட்சம் மக்களைப் பாதுகாக்க அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

நிர்மாணத்துறையில் பணிபுரிபவர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை பல கட்டங்களில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். நிர்மாண மற்றும் அபிவிருத்திச் சட்டத்தை அமுல்படுத்துவதன் ஊடாக அத் துறையில் இருப்பவர்களுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்படும் என சுட்டிக்காட்டிய அமைச்சர், இது தொடர்பான சுற்றறிக்கை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரின் கையொப்பத்தின் கீழ் கடந்த 27ஆம் திகதி நாட்டிலுள்ள அனைத்து அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (அ)

# பல்கலை மாணவர்களின் பேரணிக்கு ஆதரவு தருக!

## சிறீதரன் எம்.பி கோரிக்கை

கொழும்பு, பெப்.04

இலங்கையின் சுதந்திர தினமான இன்று தமிழர்களுக்கான கரிநாளாகப் பிரகடனம் செய்து, ”தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை” என்னும் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிலைநிறுத்தக் கோரி, யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் இன்று காலை 10.00 மணிக்கு யாழ்.பல்கலை முன்றலிலிருந்து ஆரம்பிக்கப்படும் “வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய” எழுச்சிப் பேரணிக்கு வலுச்சேர்க்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அனைத்துத் தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில்-

எமது இனத்தின் கனவுகளைச் சுமந்த இலட்சியப் பயணத்தின் நீட்சிக்கான படிமமாக, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களோடு இணைந்து முன்னெடுத்திருக்கும் எழுச்சிப் பேரணியானது இன்று காலை 10.00 மணிக்கு யாழ்பல்கலைக்கழக முன்றலில் ஆரம்பித்து எதிர்வரும் 07 ஆம் திகதி மட்டுநகரைச் சென்றடையவுள்ளது.

எமது மாணவர்களின் இப் பெருமுன்னெடுப்புக்கு சமூக, மத மற்றும் கட்சி பேதங்களற்று பேராதரவு வழங்கவேண்டிய காலக்கடமை நம் எல்லோருக்கும் உள்ளதை உணர்ந்து, தமிழ்த்தேசியப் பற்றுறுதி மிக்க எமது மக்கள் அனைவரையும் இவ் உணர்வெழுச்சிப் பேரணியில் இணைந்துகொள்ளுமாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறேன்.

அதேவேளை, இன்று சனிக்கிழமை பிற்பகலில், பேரணி கிளிநொச்சியை வந்தடையும் நேரத்தில், கிளிநொச்சி நகர வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடியும் கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டும் ஆதரவளிக்கவேண்டும்.

எமது இனத்தின் இருப்பை நிலைநிறுத்துவது குறித்த சிந்தனையும், சிரத்தையும் மிக்க கிளிநொச்சிவாழ் உறவுகள் அனைவரும் இன்று பி.ப.3.00 மணிக்கு கரடிப்போக்குச் சந்தியில் ஆரம்பித்து இரணைமடுச் சந்திவரை நீளும் எழுச்சிப் பேரணிக்கு வலுச்சேர்க்குமாறு அன்புரிமையோடு அழைத்து நிற்கிறேன். - என்றுள்ளது. (அ)

# இலங்கையின் தற்போதைய நெருக்கடிக்கும் 1971 நிலவரத்துக்கும் இடையிலான ஒற்றுமைகள் மீது ஒரு சிந்தனை



கலாநிதி லயனல் போபகே

இலங்கை அதன் 75 வது சுதந்திர தினத்தை கொண் டாடிக்கொண்டிருக்கின்ற இந்த வேளையில், ஆட்சி முறை நிறுவனங்களுக்கு இடையிலான அதிகார வேறாக்கலை ஒழுங்குபடுத்தும் தடுப்புக்கள் மற்றும் சமப்படுத்தல்களினதும் (**Checks and balances**) சட்டத் தின் ஆட்சியினதும் சீர்குலைவு குறித்து சிந்தித்துப் பார்க்கவேண்டியது முக்கியமானதாகும்.

1953, 1971, 1983 ஆண்டுகளின் நெருக்கடிகளாக இருந்தாலென்ன நீண்டகால உள்நாட்டுப்போர் மற்றும் தற்போதைய நெருக்கடியாக இருந்தாலென்ன அவற்றுக்காக பொறுப்புக்கூற வேண்டும் என்ற கடப்பாடு உணர்வு சுதந்திரத்துக்கு பின்னர் நாட்டை ஆட்சிசெய்த மூன்று குடும்பங்களிடம் இருந்தும் வெளிப்பட்டதாக இல்லை. நல்லாட்சி, சமூகநீதி மற்றும் பொருளாதார முகாமைத்துவ தகுதி பற்றியும் அந்த குடும்பங்கள் அக்கறை காட்டவில்லை. பதிலாக, அவை மேலும் கூடுதலாக மத்தியமயப்படுத்தப்பட்ட - பொறுப்புக் கூறலுக்கு அப்பாற்பட்ட அதிகாரத்தையே கோரியிருக்கின்றன.

தற்போது அர்த்தபுஷ்டியான அரசியல் மாற்றத்துக்கான கோரிக்கையை நசுக்குவதற்கு ராஜபக்ச குடும்பமும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்களும் சேர்ந்து நிற்கிறார்கள். அதற்காக அவர்கள் கொடுமையான பயங்கரவாத தடைச் சட்டம் போன்ற சட்டங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

இந்த கட்டுரை 1971 ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) கிளர்ச்சிக்கும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கும் பின்னணியில் இருந்த பொருளாதார மற்றும் கட்டமைப்புரீதியான காரணங்களை ஆராய்கிறது.

தற்போதைய நெருக்கடியைப் போன்றே 1970 களிலும் ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சி கண்டதுடன் வெளிநாட்டுக் கடன்களும் அதிகரித்தன. வேலையில்லாத் திண்டாட்டமும் தீவிரமடைந்தது.

1960 களில் கைத்தொழில் துறையின் பருமன் வளர்ச்சியற்றதாக மந்தநிலையில் ( 12 --13 சதவீதம் ) காணப்பட்டது. பெரும்பான்மையான வருமானம் சேவைத்துறைகள் மற்றும் விவசாயத்தின் மூலமாகவே பெறப்பட்டன. ஏற்றுமதித்துறை அடிப்படையில் விவசாய உற்பத்திகள் மீதே தங்கியிருந்தது. நாடு கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டிருந்தது.

1957 ஆம் ஆண்டில் 9 கோடி 50 இலட்சம் ரூபாவாக இருந்த கடன் 1966 ஆம் ஆண்டில் 34 கோடி 90 இலட்சம் ரூபாவாகவும் 1969 ஆம் ஆண்டில் 74 கோடி 40 இலட்சம் ரூபாவாகவும் உயர்ந்தது. தற்போதைய நிலைவரத்தைப் போன்றே அன்றும் வெளிநாட்டுக் கடனை மீளச்செலுத்துவதற்கான பணத்தை வெளிநாட்டு கடனுதவிகள் மூலமாகவே பெறவேண்டியிருந்தது. நாட்டின் வெளிநாட்டு நாணய கையிருப்பும் வீழ்ச்சி கண்டது. இன்றுள்ளதைப் போன்றே இறக்குமதியின் பெரும்பகுதி உணவுப்பொருட்களாகவே (சுமார் 53 சதவீதம் ) இருந்தது.

1971 ஆம் ஆண்டில் வேலையில்லாத் திண்டாட்டம் தொடர்ந்து அதிகரித்தது. 44 இலட்சம் தொழிலாளர் படையில் 585,000 பேர் உத்தியோகபூர்வமாக வேலையில்லாதவர்களாக இருந்தனர். கலாநிதி என்.எம். பெரேராவின் பொருளாதார நிருவாகம் இதை 700,000 இலட்சம் என்று கணிப்பிட்டது.

வேலையில்லாத 585,000 பேரில் 460,000 பேர் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களாகவும் 250,000 பேர் 19 - 24 வயதுடையோராகவும் இருந்தனர். 167,000 பேர் இரண்டாம் நிலைக்கல்வியைப் பெற்று முன்றாம் நிலைக்கல்விக்கு சென்றனர்.

அரசகரும "பயனாளிகளான" 1956 ஆம் ஆண்டு தொடங்கிய யுகத்தின் சிறுவர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட பொருளாதார உறுதிமொழிகளின் பயனை அடையமுடியவில்லை. 1971 அரசாங்கத்தின் அடக்குமுறையின் விளைவாக 10,000 - 15,000 சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இதை நாட்டின் ஆட்சியாளர்கள் ஒருபோதும் ஒத்துக்கொண்டதில்லை. பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர்.

61 குடிமக்களும் 63 ஆயுதப்படையினரும் உயிரிழந்ததாக அரசாங்கம் அறிவித்தது. ஆயுதப்படைகள் செய்த நீதிவிசாரணைக்கு புறம்பான கொலைகள் மற்றும் சித்திரவதைகள் குறித்து எந்தவித விசாரணைகளும் நடத்தப்படவில்லை. அத்தகைய கொடுமைகளைச் செய்தவர்கள் தண்டனைக் குள்ளாகாமல் இருக்கும் போக்கு வழமையானதாகியது.

கிளர்ச்சியின் தலைவர்கள் (அவர்களில் நானும் ஒருவன்) மீது வழக்கு தொடுக்கும் விடயத்தில் சட்டத்தின் ஆட்சி துவம்சம் செய்யப்பட்டது. ஆட்கொணர்வு மனு தாக் கல் செய்யப்படும் நடைமுறை ரத்துச் செய்யப்பட்டு சித்திரவதை மூலம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் வழக்குகளில் அனுமதிக்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்டபோதிலும், அது குறித்து ஒருபோதும் விசாரணை செய்யப்படவில்லை.

அடக்குமுறை கிரமமாக முன்னெடுக்கப்பட்டது. பொருளாதார பிரச்சினைகளாக இருந்தாலென்ன அரசியல் மற்றும் நீதீ நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாக இருந்தாலென்ன எந்த கட்டமைப்பு ரீதியான பிரச்சினையையும் ஆராய்ந்து தீர்வு காண்பதில் நாட்டம் காட்டப்படவில்லை. முன்னென்றும் இல்லாத கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. பொறுப்புக்கூறும் கடப்பாட்டை உறுதிசெய்வதில் அக்கறை காட்டப்படவில்லை. அரசினால் இழைக்கப்பட்ட குற்றங்களை விசாரிப்பதில் தயக்கம் காட்டப்பட்டது.

**இலங்கை அதன் 75 வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்ற அதேவேளை, தற்போதைய நெருக்கடி எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்தும் எவ்வாறு அதை தீர்த்துவைப்பது என்பது குறித்தும் ஆழமாகச் சிந்திக்கவேண்டியது முக்கியமானதாகும்.**

1980 களில் பொருளாதார திசைமார்க்கம் மாற்றமடைந்தது. நவதாராளவாதம் மந்திரமாகியது. நலன்புரி ஏற்பாடுகள் படிப்படியாக இல்லாமல் செய்யப்பட்டன.

இலங்கை இப்போது உல்லாசப் பிரயாணத்துறை, ஆடை உற்பத்தி, வெளிநாட்டில் வேலைசெய்யும் இலங்கையர்கள் அனுப்புகின்ற பணம் மற்றும் தேயிலை ஏற்றுமதியில் தங்கியிருக்கிறது.

தேசிய கடன் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போனது. ஆளும் குடும்பத்தவர்களின் தற்பெருமைக்காக முன்னெடுக்கப்பட்ட திட்டங்களுக்காக கோடிக்கணக்கான டொலர்கள் செலவிடப்பட்டன. யாருக்கு அவை தேவை, யார் அவற்றைப் பயன்படுத்தப் போகிறார்கள் என்பதைப் பற்றி எந்த யோசனையும் இல்லாமல் விமான நிலையங்கள், ஸ்ரேடியங்கள், அதிவேக நெடுஞ்சாலைகள், மகாநாட்டு மண்டபங்கள் மற்றும் துறைமுகங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

2000 ஆண்டுகளில் கடன் நிகர உள்நாட்டு உற்பத்தியின் 79 சதவீதமாக உயர்ந்தது. அது தொடர்ந்து அதிகரித்துக்கொண்டு கொவிட் பெருந்தொற்று நாட்டைப் பாதிப்பதற்கு முன்னதாக 100 சதவீதத்தை எட்டியது. பொருளாதார உறுதிப்பாடின்மை மோசமாகியது. சனத்தொகையின் உயர்மட்டத்தில் உள்ள 20 சதவீதத்தினரின் கைகளில் நாட்டின் வருமானத்தின் 42 சதவீதம் சென்றடைகின்ற அதேவேளை சனத்தொகையின் கீழ்மட்டத்தில் உள்ள 40 சதவீதத்தினரிடம் 17.8 சதவீத வருமானம் இருக்கிறது.

**ரணிலின் மீள் எழுச்சி**

2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்களின் விளைவாக சுற்றுலாத்துறை வீழ்ச்சி கண்ட பிறகு பொருளாதாரத்தில் ஏற்பட்ட குறுக்கம் நாட்டின் வெளிநாட்டு நாணயக் கையிருப்புக்கு நெருக்குதல்களைக் கொடுத்தது. வரிகளைக் குறைப்புச் செய்ததன் மூலம் கோட்டா பய ராஜபக்ச நிலைவரத்தை மேலும் மோசமாக்கினார். அந்த வரிக்குறைப்பு நாட்டுக்கு பல நூறு கோடி ரூபா இழப்பை ஏற்படுத்தியது.

அடுத்து அவர் பசளை இறக்குமதியை தடைசெய்தார். பசளை வகைகளை இறக்குமதி செய்வதற்கு வெளிநாட்டு நாணயம் இல்லாதமையும் அந்த தடைவிதிப்புக்கு ஒரு காரணம். இதனால் விவசாய உற்பத்தியில் படுமோசமான வீழ்ச்சி ஏற்பட்டது. குறிப்பாக முக்கியமான ஏற்றுமதி சம்பாத்தியத்தை தரும் தேயிலை , இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

பொருளாதாரம் தொடர்ந்து வீழ்ச்சி கண்டுவந்த நிலையில் உணவு வகைகள்,எரிபொருட்கள், மருந்து வகைகள், சமையல் எரிவாயு மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டது. சனத்தொகையில் உயர்மட்டத்தில் உள்ள 20 சதவீதத்தினரால் நிலைமயை சமாளிக்கக்கூடியதாக இருந்த அதேவேளை அதிகப்பெரும்பான்மையான மக்களுக்கு அன்றாட வாழ்க்கை பெரும் சுமையாகியது.

தன்னியல்பாக மூண்ட மக்கள் கிளர்ச்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை பதவி விலக நிர்ப்பந்தித்தது. அதையடுத்து நீண்டகாலமாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை அடையமுடியாமல் இருந்த ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்றம் ஜனாதிபதியாக தெரிவுசெய்தது.

போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தையை நடத்தி அவர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை கையாளுவதற்கு பதிலாக விக்கிரமசிங்கவின் அரசாங்கம் அரச அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டது. பொருளாதார முகாமைத்துவம் தெரியாதவர்களிடமும் அரசாங்கப் பணத்தைச் சூறையாடியவர்களிடமும் பொருளாதார மீட்டெடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளுக்கான பொறுப்பு மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருப்பதை காண்கிறோம்.

தவறான முகாமைத்துவம், ஊழல், பொருளாதார மற்றும் அரசியல் முறைமையில் பரவலாக காணப்படும் விரயம் ஆகியவையே இன்றைய நெருக்கடிகளுக்கு பிரதான காரணிகள். ஆனால் முன்வைக்கப்படும் தீர்வுகள் அந்த காரணிகளைக் கவனத்தில் எடுத்தவையாக இல்லை.

வரி செலுத்த இயலாத பிரிவினரே பெரும் பொறுப்பை சுமக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். கட்டமைப்புரீதியான பிரச்சினைகள் உரிய முறையில் கையாளப்படாவிட்டால் அது இன்னொரு பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு வழிவகுக்கும்.

**முடிவுரை**

இலங்கை அதன் 75 வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்ற அதேவேளை, தற்போதைய நெருக்கடி எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்தும் எவ்வாறு அதை தீர்த்துவைப்பது என்பது குறித்தும் ஆழமாகச் சிந்திக்கவேண்டியது முக்கியமானதாகும். இல்லையேல் கடந்த காலத்துக்குள் மீண்டும் வாழ நாம் நிர்ப்பந்திக்கப்படுவோம்.

முறைமை மாற்றத்தைச் செய்யத்தவறினால் தனிப்பட்ட முறையிலும் பொருளாதார மட்டத்திலும் மாபேரளவு இழப்புக்களை சந்திக்கவேண்டியிருக்கும் என்பதை 1971, 2020 ஆண்டுகள் எமக்கு நினைவூட்டுகின்றன. முறைமை மாற்றத்தைச் செய்வதே 1971 ஆம்ஆண்டில் அநியாயமாக தடுத்துவைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கும் அரசின் கைகளில் பலியான பெயர் தெரியாத ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கும் எம்மால் செய்யக்கூடிய நீதியாகும்.

# இலங்கையின் அரசியல் யாப்பில் சமூகங்கள்: சிங்கள - பௌத்தர்கள் இலங்கை மட்டுமே தமது தாய்நாடு என்ற கண்ணோட்டத்தில் உள்ளனர்!

நிஹால் அபேசிங்க

(நேற்றைய தொடர்ச்சி)

அடிப்படையில் இந்த வழக்குகள் நான்கு துறைகளை உள்ளடக்கியிருந்தன. அரசிடமிருந்து பௌத்த சுயாதீனத்தைப் பாதுகாத்தல், பௌத்த பாரம்பரியத்தைப் பாதுகாத்தல், பௌத்த இடங்களைப் பாதுகாத்தல் மற்றும் மத நிந்தனையிலிருந்து பௌத்த மதத்தைப் பாதுகாத்தல்.

இலங்கைக்கான ஒரு வரைவு அரசியல் யாப்பைத் தயாரிப்பதற்கென ரொமேஷ்டி சில்வாவின் தலைமையில் ஒரு நிபுணர்களின் கமிட்டி உருவாக்கப்பட்டது. அந்த வரைவு 2022 ஜூலை மாதம் ஒப்படைக்கப்பட்டது. தற்பொழுது அது ஓர் அறிவுத்துறை சார் அக்கறையாக மட்டுமே இருந்து வருவது போல் தெரிகிறது. ஆனால், அதேவேளையில் அந்த வரைவு பௌத்த மதத்துக்கும், சிறுபான்மைச் சமூகங்களுக்குமிடையிலான உறவுகளின் அபிவிருத்தி எந்த திசையில் இருந்து வருகின்றது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

### 2022 அரசியல் யாப்பு வரைவு

அத்தியாயம் 2: 10 இலங்கை குடியரசு பௌத்த மதத்திற்கு அதியுயர் ஸ்தானத்தை வழங்குவதுடன், அதன் பிரகாரம் புத்த சாசனத்தைப் பாதுகாத்து, போஷித்து வளர்ப்பதற்கான கடமையை அரசு கொண்டிருத்தல் வேண்டும். அதே வேளையில், உறுப்புரைகள் 26 மற்றும் 27 என்பவற்றின் மூலம் வழங்கப்பட்டிருக்கும் உரிமைகள் அனைத்து சமயங்களுக்கும் உத்தரவாதப்படுத்தப்படும்.

### அடிப்படை கடமைகள் மற்றும் உரிமைகள் தொடர்பான அத்தியாயம்

26 (1) ஒவ்வொரு நபரும் சிந்தனை, மனச்சாட்சி மற்றும் சமய சுதந்திரத்துக்கு உரித்துடையவர் ஆவார்.

(2) ஒவ்வொரு நபரும் தான் விரும்பும் ஒரு சமயத்தை அல்லது நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கான அல்லது அதனைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்தைக் கொண்டிருப்பார். தான் விரும்பும் ஒரு சமயத்தை கைவிட்டு விடுவதற்கு அல்லது பின்பற்றுவதற்கான சுதந்திரத்தை பாதிக்கக் கூடிய விதத்தில் எந்தவொரு நபரும் பலவந்தத்திற்கு உட்படுத்தப்படக் கூடாது.

(3) அரசியல் யாப்பு மற்றும் ஏதேனுமொரு சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைவாக, பொருத்தமான விடத்து, பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் தமது சொந்த நம்பிக்கைகளின் பிரகாரம் தமது பிள்ளைகளுக்கு சமய மற்றும் ஒழுக்கக் கல்வியை வழங்குவதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்கள்.

(4) இந்த உறுப்புரையில் ‘பலவந்தம்’ என்பது பலப் பிரயோகம், ஆசை காட்டுதல் மற்றும் மோசடி என்பவற்றை உள்ளடக்கும்.

27 ஒவ்வொரு பிரஜையும் தனிப்பட்ட முறையில் அல்லது மற்றவர்களுடன் இணைந்து பகிரங்கமாக அல்லது தனிப்பட்ட முறையில் தனது சமயத்தை அல்லது நம்பிக்கையை வழிபாடு, அனுசரிப்பு, நடைமுறை, போதனை என்பவற்றின் மூலம் வெளிப்படுத்திக் காட்டுவதற்கான சுதந்திரத்தைக் கொண்டிருப்பார்.

உறுப்புரை 24 இன் மூலம் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் (சித்திரவதை அல்லது குரூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவுபடுத்தும் விதத்தில் நடத்துதல், தண்டித்தல் என்பவற்றிலிருந்து சுதந்திரம்) அடிப்படை உரிமைகள் மற்றும் 26 இன் மூலம் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் சிந்தனை மற்றும் சமய சுதந்திரம் தொடர்பாக விதிக்கப்படக் கூடிய வரையறைகளின் வீச்சினை பிரிவு 49 விரிவுபடுத்துகின்றது என்ற விடயத்தை இங்கு குறிப்பிட வேண்டும். இங்கு விசேடமாக குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த இரு உரிமைகளும் கேள்விக்குரியவையாக இருந்து வருவது ஏன்? இந்த உரிமைகள் வரையறுக்கப்படக் கூடிய நிலவரங்களின் வீச்சு, நிறைவேற்று ஜனாதிபதி அல்லது நாடாளுமன்றம் கருதும் எந்த ஒரு விடயம் வரையிலும் விரிவாக்கப்பட முடியும்.

### அத்தியாயம் 3: அரச கொள்கையின் நெறிப்படுத்தல் கோட்பாடுகள்

13 (1) அத்தியாயம் 2 (பௌத்த மதம்) மற்றும் 7 (இலங்கைக் குடியரசின் தேசிய மரபுரிமையைப் பாதுகாத்தல்) என்பவற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கும் அரசியல் யாப்பு ரீதியான கடப்பாட்டினை நிறைவேற்றி வைப்பதற்கெனவும், அரசாங்கம் பேரவையின் ஆலோசனையைக் கோரும் வேறு ஏதேனும் விடயம் தொடர்பாகவும் அரசாங்கத்திற்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் என்பவற்றை வழங்குவதற்கென மகா சங்கத்தினரின் ஒரு பேரவை ஸ்தாபிக்கப்படும்.

235 (4) புத்த சாசனம் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கென தேசிய அரசு பேரவை விசேட நீதிமன்றங்களை அமைப்பதற்கான ஏற்பாட்டை பயன்படுத்த முடியும்.

இறுதியாக, “மக்களிடமிருந்து அவர்களுடைய இறைமையை அபகரிக்க முடியாது” என்ற தலைப்பின் கீழ் எதேச்சையாதிகார இயல்பிலான ஏற்பாடுகள் 79 ஐ குறிப்பிடாமல் இருக்க முடியாது.

79 (1) குடியரசுக்கு உள்ளே அல்லது குடியரசுக்கு வெளியே எவரேனும் நபர் குடியரசின் மக்கள் தமது இறைமையை அனுபவிப்பதனை இல்லாமல் செய்தால் அல்லது இல்லாமல் செய்வதற்கு முயற்சித்தால் அல்லது அவர்களுடைய அந்த இறைமையை இல்லாமல் செய்வதற்கு சூழ்ச்சி செய்தால் அல்லது அதனை மேம்படுத்துவதை ஊக்குவித்தால்,



ஐக்கிய நாடுகள் சபை அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் எந்தவொரு அமைப்பையும், ஏனைய ஏதேனும் சர்வதேச அமைப்பையும், எந்தவொரு அரசையும் இலங்கை குடியரசுக்கு எதிராக ஆயுதப் பலத்தைப் பிரயோகிப்பதுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் வழிமுறைகளைப் பிரயோகிக்குமாறு அல்லது இலங்கை அரசுடனான பொருளாதார உறவுகளை நிறுத்துமாறு அல்லது இடைநிறுத்துமாறு அல்லது தடுத்து நிறுத்துமாறு அல்லது குடியரசின் பிராந்தியத்துக்குள் அத்தகைய நபரினால் நிகழ்த்தப்பட்டிருப்பதாகக் கூறப்படும் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பாக ஏதேனுமொரு நியாயாதிக்கத்தில் இலங்கைப் பிரஜை எவருக்கெதிராகவும் வழக்குத் தொடுத்து, குற்றச்சாட்டுகளை முன்வைத்தல் அல்லது தண்டிப்பதற்கு ஊக்குவித்தல், மேம்படுத்துதல் அல்லது தூண்டுதல்,

(1) பேசப்பட்ட வார்த்தைகள் மூலம், வாசிப்பதற்கென உத்தேசிக்கப்பட்ட வார்த்தைகள் மூலம் அல்லது அடையாளங்கள் அல்லது கட்புல சமர்ப்பணங்கள் மூலம் இலங்கை குடியரசின் தேசிய கொடி, தேசிய சின்னம், தேசிய கீதம் என்பவற்றை அவமதித்தல் அல்லது அவை தொடர்பாக மரியாதைக் குறைவைக் காட்டுதல் ஒரு குற்றச் செயலாக இருந்து வரும். அது தொடர்பாக குற்றத் தீர்ப்பு வழங்கப்படுமிடத்து, ஒன்றில் 20 வருடங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது சொத்துக்களை பறிமுதல் செய்தல் அல்லது இரு தண்டனைகளும் வழங்கப்பட முடியும்.

(2) பந்தி (1) இன் கீழ் ஏதேனும் குற்றச் செயலொன்று தொடர்பாக குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் எவரேனும் நபரின் சிவில் உரிமைகள் இருபது வருடங்களுக்கு மேற்படாத காலப் பிரிவுக்கு பறிக்கப்படும்.

(3) இந்த அத்தியாயத்தில் ‘போர்’ என்பது பயங்கரவாதச் செயல்களையும் உள்ளடக்குகின்றது.

ஒரு புறத்தில் பௌத்த மதத்தின் ஸ்தானம் மற்றும் அரசின் வகிபங்கு என்பனவும், மறுபுறத்தில் ஏனைய சமயங்களுக்குரிய இடமும் அரசியல் யாப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் ஏற்றத் தாழ்வானதாக இருந்து வருகின்றது. பௌத்த மதத்தின் தெளிவான மேலாதிக்கம் காணப்படுகிறது் அது தவிர, 1978 யாப்பிலும் இது காணப்படுகின்றது. இந்த நிலைமை முரண்பாடு மற்றும் வன்முறை ஏற்படக்கூடிய சாத்தியப்பாட்டை கொண்டுள்ளது. இலங்கையின் இனத்துவ சமய வன்முறையின் அடிமட்டத்தில் மூன்று முதன்மையான தூண்டுதல் காரணிகள் இருந்து வருவதாக கெஹான் குணதிலக்க குறிப்பிடுகிறார்.

முதலாவதாக, சிங்கள பௌத்த சமூகம் பல தசாப்த காலமாக சமூகமயமாக்கல் செயன்முறையொன்றுக் கூடாக சென்றிருப்பதுடன், அது தனித்துவமானதொரு உரித்துச் சிக்கலை அவர்களுக்கு மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சிக்கல், அச்சமூகத்தைச் சேர்ந்த பலர் தாம் இலங்கையின் அசல் உரிமையாளர்கள் மற்றும் அனுசரணையாளர்கள் என்ற கருத்தை ஏற்றுக் கொள்வதற்கு அவர்களைத் தூண்டியுள்ளது. இந்த மேலாதிக்க அந்தஸ்திற்கு ஒரு சிறுபான்மைச் சமூகத்தினால் ஏற்படக் கூடிய எந்தவொரு பாரதூரமான அச்சுறுத்தலும் கடும் எதிர்ப்புடன் எதிர்கொள்ளப்பட்டு வந்ததுடன், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அது வன்முறைக்கு வழிகோலியுள்ளது.

இரண்டாவதாக, தமிழர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகியோர் தொடர்பான உலகளாவிய அடையாளங்கள் சிங்கள பௌத்த மக்களுக்கு மத்தியில் ஒரு சிறுபான்மை தாழ்வுச் சிக்கலை உருவாக்கியுள்ளன. அவர்கள் அவசியமாகவே இலங்கை மட்டுமே தமது தாய் நாடு என்ற கண்ணோட்டத்தை கொண்டுள்ளார்கள். அந்த விதத்தில் சுயாதிக்கத்துக்கான தமிழர் கோரிக்கைகள், கிறிஸ்தவ சமய பிரசாரம் மற்றும் இஸ்லாமிய மயமாக்கல் என்பன சிங்கள பௌத்த சமூகத்துக்கு மத்தியில் இருப்பியல் வாத அச்சங்களை தோற்றுவித்துள்ளன. அந்த அச்சங்கள் காரணமாகவே தீவிரவாதக் குழுக் களின் கடுமையான தேசியவாத கோஷங்களில் அடிக்கடி சிங்கள-பௌத்தர்கள் என்ற பதம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், இனத்துவ சமய பதற்ற நிலைமைகள் மிக எளிதில் வன்முறையாக வெடிக்க முடியும் என்பதையும் அவை எடுத்துக் காட்டுகின்றன.

மூன்றாவதாக, பௌத்த பிக்குகள் இலங்கையில் மிக வலுவான ஒரு சமூக அரசியல் சக்தியாக இருந்து வருவதுடன், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசின் சட்டம் அவர்களுக்கு அடிபணிந்ததாக காணப்படுகின்றது. மதவாதிகள் தொடர்பான இந்த விதிவிலக்கு தண்டனை விலக்குரிமை கலாசாரமொன்றை உருவாக்கியுள்ளது. இனத்துவ சமய வன்முறைகளை நிகழ்த்தும் நபர்களை அதற்குப் பொறுப்புக் கூற வைக்கும் விடயத்தில் சட்டத்தை அமுல் செய்யும் முகவரகங்கள் தயக்கம் காட்டும் ஒரு நிலையை இது உருவாகியிருக்கிறது. குறிப்பாக, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் புத்த பிக்குகளின் தூண்டுதலின் பேரில் உள்ளூர் மட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறும் பொழுது இந்நிலைமை காணப்படுகின்றது. இந்த மூன்று காரணிகளும் ஒன்றாக இணைந்து இலங்கையின் கலாசார, சமூக - அரசியல் மற்றும் அரச கட்டமைப்புக்குள் இனத்துவ - சமய வன்முறையை வேரூன்றச் செய்து வருகின்றன. இந்நிலைமை தொடர்ந்து நீடிக்கும். அது உலகில் ஏனைய பாகங்களில் இடம்பெறும் பிரச்சினைகள் தொடர்பான பகுத்தறிவு ரீதியான புரிந்துணர்விலும் பார்க்க, பெருமளவுக்கு உணர்ச்சித் தூண்டல் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

அரசியல் யாப்பின் வரைவு இறுதியில் ஒரு பாளி பாடலை கொண்டுள்ளது. அதன் மொழிபெயர்ப்பு வருமாறு:

“உரிய நேரத்தில் மழை பொழியட்டும்
பயிர்கள் அமோகமாக செழித்து வளரட்டும்
மக்கள் மகிழ்ச்சியாக வாழட்டும்
ஆட்சியாளர்கள் நேர்மையானவர்களாக
இருக்கட்டும்” - நாங்களும் இதற்கு உடன்படுவதுடன், இந்த எதிர் பார்ப்பு நிறைவேற்றப்படும் என நம்புகிறோம்.

(முற்றும்)

# அரச அதிகாரிகளுக்கான உத்தரவு தேர்தல் நடவடிக்கையை பாதிக்கும்!

## ஜனாதிபதிக்கு பவ்ரல் அமைப்பு ஆலோசனை

கொழும்பு, பெப். 04

கடன் அடிப்படையில் வேலைகளை மேற்கொள்ள வேண்டாம் என அரச அதிகாரிகளுக்கு விடுத்திருக்கும் உத்தரவு உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடவடிக்கைக்கு தடையாக அமையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதனால் இந்த அறிவிப்பு வாக்களிப்பு முடியும்வரை, தேர்தல் நடவடிக் கைகளுக்கு பொருந்தாது என அறிவிக்க வேண்டும் பவ்ரல் அமைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுக்கொண்டுள்ளது

பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மைக்கால வரலாற்றில் இடம்பெற்ற தேர்தல்களில் அரசியல் கட்சி மற்றும் மக்கள் மத்தியில் அதிக அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ள தேர்தல் இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் வாக்களிப்பாகும். இதற்கு நாட்டுக்குள் இருக்கும் பொருளாதார பிரச்னையும் அரசாங்கம் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் அரச தரப்பினரால் அடிக்கடி தெரிவிக்கப்படும் அறிவிப்புகள் காரணம் என்பது இரகசியமானதல்ல.

தற்போதும் அரச தரப்பினரால் மேற்கொள்ளப்படும் அறிவிப்புக்கள் ஊடாக தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஓரளவு பாதிப்பு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது. அது கடன் அடிப்படையில் வேலைகளை மேற்கொள்ள வேண்டாம் என நீங்கள் அரச நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கி இருப்பதாகும்.

அதேநேரம் அவ்வாறான தொரு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அரச அதிகாரிகள் அதற்கு தனிப்பட்ட முறையில் பொறுப்புக்கூற வேண்டும் என தெரிவிப்பதன் ஊடாக, அரச நிறுவனங்கள் தேர்தல் ஒன்றின் போது சாதாரணமாக மேற்கொள்ளும் மீள செலுத்தும் செலவு செயல்பாடுகளுக்கு தடைகள் ஏற்படலாம்.

அதனால், பொருளாதார பிரச்னைக்கு மத்தியில் அரச நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் இவ்வாறான கட்டளை, வாக்களிப்பு முடியும் வரை, தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுந்தாது என அறிவிக்க வேண்டும் எனவும் இதன் பிறகு இதன்னுடன் தொடர்பாக விடுக்கப்படும் சுற்று நிருபங்கள் ஊடாக இந்த விடயங்களை தெளிவாக உள்ளடக்குமாறும் உங்களை கேட்டுக்கொள்கிறோம்.

நாட்டில் பொருளாதார பிரச்னை இருப்பதை நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம். என்றாலும் அதனை காரணமாகக் கொண்டு மக்களின் வாக்குரிமைக்கு தடங்களை ஏற்படுத்துவது அல்லது பறித்துக்கொள்வது ஜனநாயகத்தை மதிக்கின்ற எந்த தலைவரும் செய்யக்கூடாத நடவடிக்கையாகும். உங்களைப்போன்ற தலைவர் அவ்வாறு செயல்பட மாட்டீர்கள் என்று நாங்கள் நம்புவோம்.

அத்துடன் அரசமைப்பின் 33ஆவது (ஏ) யாப்பின் பிரகாரம் சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு பொருத்தமான சூழலை ஏற்படுத்துவது மற்றும் உறுதிப்படுத்துவது ஜனாதிபதி என்றவகையில் உங்களின் பொறுப்பாகும். அதேநேரம் அவ்வாறு செயல்படுவதன் மூலம் உங்களுக்கு தேசிய மற்றும் சர்வதேசத்தில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு காரணமாவதுடன் அதன் நம்பிக்கையை பெருளாதார பிரச்னையை தீர்ப்பதற்கு இலகுவாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது.

(ஐ)

# ஜனாதிபதி உரை தொடர்பில் 9, 10ஆம் திகதிகளில் விவாதம்!

கொழும்பு, பெப். 04

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் எதிர்வரும் 8ஆம் திகதி முன்வைக்கப்படவிருக்கும் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தை எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமைநடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய எதிர்வரும் 09ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூட விருப்பதுடன், நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி மற்றும் பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகள் தொடர்பாக கடந்த பாராளுமன்ற கூட்டத்தொடரில் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 51 பிரேரணைகளை அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்படும் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் மாலை 5.00 மணிவரை நடைபெறும்.

அத்துடன், அரசாங்கத்தின் கொள்கை அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தை மறுநாள் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை இரண்டாவது நாளாகவும் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம குறிப்பிட்டார். (ஐ)

# சுதந்திர தினத்துக்கு எதிராக போராட்டம்!

## த.தே.ம. முன்னணி அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 04

சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட செயலகம் முன்பாக போராட்டம் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அழைப்பின் பேரில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் அனைவரையும் பங்கேற்குமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

( ஐ)

கல்வி tv CHANNEL-1

**04.02.2023**

**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**04.02.2023**

**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு திருமலை பள்ளிவாசலில் பிரார்த்தனை

திருமலை, பெப். 04

75ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில், திருகோணமலை -அனுராதபுர சந்தியில் அமைந்துள்ள ஹூலூர் பெரிய ஜும்மா பள்ளி வாசலில் விசேட உரையும், துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்கா தலைமையில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்து கொண்டு சுதந்திரதினம் பற்றி உரை நிகழ்த்தினார்.

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஆ.மன்சூரினால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த நிகழ்வில், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் வி.எச்.என்.ஜெய விக்ரம, கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர் கள், மாகாண திணைக்களத் தலைவர்கள், அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர், செயலாளர், உலமாக்கள், மத்ரசா மாணவர்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகி யோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (அ)

## உள்ளூராட்சி சபைகளை கலைக்காமல் தேர்தல் நடத்துவது ஊழலுக்கே வழி!

### ஐக்கிய காங்கிரஸ் கட்சி சுட்டிக்காட்டு

அம்பாறை, பெப். 04

**உள்ளூராட்சி மன்றங்களை கலைக்காமல் தேர்தல் நடத்துவது பாரிய ஊழலுக்கும் அதிகார துஷ்பிரயோகத்துக்கும் வழி வகுக்கிறது என்பதால் உள்ளூராட்சி மன்றங்களை அதற்குரிய அமைச்சர் கலைத்துவிடவேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.**



இது பற்றி ஐக்கிய காங்கிரசின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவிக்கையில்-

நாட்டில் ஊழல், துஷ்பிரயோகமற்ற தேர்தலை நடத்துவதில் தேர்தல் திணைக்களம் மிகச்சிறந்த முறையில் செயல்படுகிறது. அந்த வகையில் அரசாங்கத்தின் சொத்துக்கள் கட்சிகள், சுயேற்சைகளின் தேர்தல் பணிக்காக பயன்படுத்துவதை தேர்தல் ஆணைக்குழு தடைசெய்துள்ளது.

ஆனாலும் உள்ளூராட்சி மன்றங்கள் இன்னமும் கலைக்கப்படாததால் உள்ளூராட்சி மன்றங்களும் அவற்றின் இடங்கள், வாகனங்கள் என்பனவும் அரச சொத்துக்கள் என்பதால் அவை தேர்தல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படும் செய்திகளை இந்த தேர்தல் காலத்தில் அறிகிறோம்.

தற்போது உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள மேயர்களும், தவிசாளர்களும், உறுப்பினர்களும் இம்முறையும் வேட்பாளர்களாக போட்டியிடுவதால் அவர்கள் தமது தேர்தல் பிரச்சாரங்களுக்கு தமக்குரிய அரச வாகனங்களிலேயே பயணிக்கின்றனர்.

அது மட்டுமல்லாது சில மேயர்கள் தேர்தல் சம்பந்தமான தமது கட்சி கூட்டங்கள், ஊடக மாநாடுகளை மாநகர கட்டடத்தில் செய்வதன் மூலம் மிகப்பெரும் அத்துமீறல்களை புரிகின்றனர்.

ஆகவே தேர்தல் துஷ்பிரயோகங்களுக்கு அரச சொத்துக்களும், உறுப்பினர்கள் என்ற அந்தஸ்தையும் பாவிக்காமல் தடுக்கவேண்டுமாயின் உடனடியாக உள்ளூராட்சி மன்றங்களை கலைப்பதன் ஊடாகவே நேர்மையான தேர்தலை நாம் காண முடியும்.

இதுவிடயத்தில் உள்ளூராட்சி அமைச்சர் கவனமெடுக்க வேண்டும். இதற்கான அழுத்தத்தை தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் அரசுக்கு கொடுக்க வேண்டும் - என்றார். (அ-06)

## கிழக்கின் முதலாவது உளுந்து தோல் நீக்கும் இயந்திரம் தங்கவேலாயுதபுரத்தில் திறப்பு

### அம்பாறை அரச அதிபர் டக்ளஸ் திறந்து வைப்பு

அம்பாறை, பெப். 04

கிழக்கிலங்கையின் முதலாவது உளுந்து தோல் நீக்கும் இயந்திரம் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள தங்க



வேலாயுதபுரத்தில் அம்பாறை அரச அதிபர் டக்ளஸினால் திறந்து வைக்கப்பட்டது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரனின் அயராத முயற்சியால் இவ் இயந்திரம் பல லட்ச ரூபாய் செலவில் பெறப்பட்டது.

இவ் இயந்திரம் கிழக்கு மாகாணத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் மட்டுமே உள்ளது.

பிரதேச செயலாளர் அவர்களின் நெறிப்படுத்தலின் ஊடாக திட்டமிடல் பிரிவின் கீழ் சௌபாக்கிய வேலைத்திட்டத்தின் கீழ் இவ் இயந்திரம் பெறப்பட்டுள்ளது.

இவ் வேலை திட்டத்தினை கடந்த செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் வைபவ ரீதியாக ஆரம்பித்தது வைத்தார்.

இந்த நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன், உதவி பிரதேச செயலாளர் க.சதிசேகரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனஸ் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் எம்.. அனோஜா மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் திருக்கோவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

## அம்பாறை கிராமங்களில் மேம்பாட்டுத் திட்டங்கள்

அம்பாறை, பெப். 04

அம்பாறை மாவட்டத்தில் இன வன்செயல்கள் காரணமாக பாதிப்புகளை தொடர்ந்தும் எதிர்கொண்டு வருகின்ற தமிழ் கிராமங்களில், வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களை, இவ்வருடத்தில் முன்னுரிமைப் படுத்தி மேற்கொள்வதற்கு, அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்க சமாசம் தீர்மானம் எடுத்துள்ளது.

சமாசத்தின் தலைவர் எஸ். லோகநாதன் இது குறித்து தெரிவிக்கையில்-

இந்த மாவட்டத்தில் இன வன்செயல்கள் காரணமாக தொடர்ந்தும் பல கிராமங்கள், பல வடிவங்களில் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றன.

இவற்றை அடையாளம் கண்டு, எமது வேலை திட்டங்களில் முன்னிலைப்படுத்த தீர்மானித்து உள்ளோம். இங்கு வாழ்வாதார மேம்பாட்டு திட்டங்களை முன்னெடுப்பதற்கு, புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் உதவி, ஒத்தாசை வழங்க முன்வந்துள்ளார்கள் - என்றார். (அ)

## ஏறாவூரில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு தாக்குதல்

மட்டக்களப்பு, பெப். 04

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடு ஒன்றின் மீது நள்ளிரவு வேளை பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஏறாவூர் மீராக்கேணி பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்று முன் தினம் நள்ளிரவு 12 மணியளவில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இனந்தெரியாதோரினால் மேற்கொள்ளப்பட்ட பெற்றோல் குண்டு தாக்குதலில் வீட்டின் யன்னல் கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்துள்ளன.

தாக்குதல் நடாத்தப்பட்ட வீட்டில் வசிப்பவர்கள், போதைப் பொருள் ஒழிப்பு விவகாரங்களுக்கு முக்கியத்துவம் வழங்கி, நண்பர்களுடன் இணைந்து போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல்களை வழங்கி வந்துள்ளனர்.

இவ்வாறான நிலையிலேயே வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது வீட்டிலிருந்தவர்களுக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## முஸ்லிம் காங்கிரஸை பலப்படுத்துவதனால் முஸ்லிம்களின் உரிமைகளை வெல்ல முடியும்

### அப்துல் மஜீத் வலியுறுத்து

அம்பாறை, பெப். 04

முஸ்லிம் சமூதாயத்தின் அடையாளத்தை நிலைநிறுத்தி நிற்கும் முஸ்லிம் காங்கிரஸை இத்தேர்தலில் வெற்றிபெறச் செய்வதன் மூலமே முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என அக்கட்சியின் தவிசாளரும் முன்னாள் இணைந்த வடக்கு- கிழக்கு மாகாண சபையின் உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீத் வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் காரைதீவு பிரதேச சபைக்கு முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மாவடிப்பள்ளியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முஸ்லிம் சமூகத்தின் பேச்சாளர் முஸ்லிம் காங்கிரஸ் என்பதை என்னால் துணிவுடன் எடுத்துச் சொல்ல முடியும். கடந்த 26ஆம் திகதி வியாழக்கிழமை ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற சர்வகட்சி கூட்டத்தில் கட்சியின் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம், மன்னார் மாவட்டம் உட்பட கிழக்கில் பல மாவட்டங்களில் முஸ்லிம்கள் இழந்து நிற்கின்ற காணிப் பிரச்னைகள் தொடர்பாகவும், முஸ்லிம் மக்களின் வாழ்விடம் மீள்குடியேற்றம் சம்பந்தமாகவும் ஆணித்தரமாக எடுத்துக் கூறியிருந்தார்.

மகிந்த அரசாங்க காலத்தில் இன அடையாளம் கொண்ட அரசியல் கட்சிகளை தடை செய்ய வேண்டும் என்ற குரல் பௌத்த சிங்கள கடும்போக்கு வாதிகளால் முன்வைக்கப்பட்டது. அவர்களின் கூக்குரலில்



அச்சம் கொண்ட எம்மவரின் கட்சிகள் இரண்டு கட்சியில் இருந்த முஸ்லிம் என்ற பதத்தை நீக்கிக் கொண்டன. இவர்களை முஸ்லிம் சமூகத்தின் பேச்சாளர்களாக எப்படி அங்கீகரிக்க முடியும்? முஸ்லிம் சமூதாயத்தின் அடையாளத்தை நிலைநிறுத்தி நிற்கும் முஸ்லிம் காங்கிரஸை வெற்றிபெறச் செய்வதன் மூலமே நமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் - என்றார். (அ-06)

ஈழநாடு



# உக்ரைன் போரில் வெற்றி நிச்சயம்!

## விளாடிமிர் புடின் உறுதி



மொஸ்கோ, பெப். 04

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யா நிச்சயம் வெற்றியடையும் என விளாடிமிர் புடின் உறுதியளித்தார்.

தற்போது வோல்கோகிராட் என அழைக்கப்படும் ஸ்டாலின் கிராட்டில் நாஜி ஜேர்மனிக்கு எதிரான செம்படையின் வெற்றியின் 80ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் நிகழ்வில் பேசிய ரஷ்ய ஜனாதிபதி புடின் இதனை தெரிவித்தார்.

ரஷ்ய ஜனாதிபதி தனது உரையின்போது, இரண்டாம் உலகப் போரில் சோவியத் யூனியனின் சண்டைக்கும், நடந்து கொண்டிருக்கும் ரஷ்யா-உக்ரைன் மோதலுக்கும் இடையே உள்ள ஒற்றுமையை வெளிப்படுத்தினார்.

அவரது உரையின்போது- “துரதிர்ஷ்டவசமாக, நாசிசத்தின் சித்தாந்தம் அதன் நவீன வடிவத்திலும் வெளிப்பாட்டிலும் மீண்டும் நேரடியாக நமது நாட்டின் பாது காப்பை அச்சுறுத்து வதை நாங்கள் காண்கிறோம்.” -என்றார்.

பேர்ளின் அனுப்ப உத்தேசித்துள்ள சக்திவாய்ந்த போர் டாங்கிகள் பற்றி குறிப்பிடுகையில், இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஜேர்மனி ரஷ்யாவை மீண்டும் அச்சுறுத்துகிறது என்று புடின் கூறினார்.

எவ்வாறாயினும், மொஸ்கோவை அச்சுறுத்தும் நாடுகளுக்கு  பதில் முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

உக்ரைனுக்கு ஆயுத உதவியளித்ததற்காக ஜேர்மனியைக் கண்டித்த புடின், அணு ஆயுதங்களை உள்ளடக்கிய ரஷ்யாவின் முழு ஆயுதக் களஞ்சியத்தையும் பெறத் தயாராக இருப்பதாகக் கூறினார்.

“அவர்கள் மீண்டும் உக்ரைன் பிரதேசத்தில் ஹிட்லரின் ஆதரவாளர்களான பண்டேரைட்டுகளின் கைகளால் ரஷ்யாவுடன் சண்டையிடப் போகிறார்கள்,” என்று அவர் கூறினார்.

ஐரோப்பிய நாடுகளை ரஷ்யாவுடன் ஒரு புதிய போருக்கு இழுத்து வெற்றி பெறுவார்கள் என்று எதிர்பார்ப்பவர்கள், ரஷ்யாவுடனான நவீன யுத்தம் அவர்களுக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும் என்பதை வெளிப்படையாக புரிந்து கொள்ளவில்லை என்று ரஷ்ய ஜனாதிபதி மேலும் கூறினார்.



# சீன கண்காணிப்பு பலூனை சுட்டு வீழ்த்த அமெ. திட்டம்!

நியூயோர்க், பெப். 04

சீன கண்காணிப்பு பலூனை கண்காணித்து வரும் அமெரிக்கா, அதன் இடிபாடுகள் விழும் அபாயம் இருப்பதாகக் கருதப்பட்டதால், அதைச் சுட்டு வீழ்த்த திட்டமிட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு நிலைமை குறித்து விளக்கம் அளிக் கப்பட்டுள்ள நிலையில், சீனா இன்னும் இது குறித்து கருத்து தெரிவிக்கவில்லை.

சீனாவுக்கு சொந்தமான கண்காணிப்பு பலூன், சமீபத்திய நாட்க ளில் முக்கியமான இடங்களில் பறப்பதைக் கண்டறிந் துள்ளது. இது அண்மையில் மேற்கு மாநிலமான மொன்டானாவிற்கு மேலே காணப்பட் டது.

கடந்த புதன்கிழமை மொன்டானாவில் உள்ள பில்லிங்ஸ் நகரின் மீது தோன்றுவதற்கு முன், இந்த பொருள் அலாஸ்காவின் அலுடியன் தீவுகள் மற்றும் கனடா வழியாக பறந்தது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒரு மூத்த பாதுகாப்பு அதிகாரி, பெயர் தெரியாத நிலையில், வெள்ளை மாளிகை அந்த பொருளை சுட்டு வீழ்த்துவதற்கு உத்தரவிட்டால், எவ்-22 உட்பட போர் விமானங் களை அரசாங்கம் தயார் செய்ததாக கூறினார்.

பாதுகாப்பு அமைச்சர் லொயிட் ஆஸ்டின் மற்றும் அமெரிக்க கூட்டுப் படைகளின் தலைவர் ஜெனரல் மார்க் மில்லி உள்ளிட்ட உயர்மட்ட இரா ணுவத் தலைவர்கள் இந்த அச்சுறுத்தல் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

வணிக விமான நிறுவனங்கள் பயன்படுத்தும் உயரத்தை விட பலூன் குறிப்பிடத்தக்க வகையில் இருந் ததால் பொதுமக்களின் விமானப் போக்குவரத்துக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(அ)

# பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியுடன் அமெரிக்க அமைச்சர் சந்திப்பு

பெஷாவர், பெப்.  02

பெஷாவர் மசூதியில் நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 100ஆக அதிகரித்துள்ளது.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்கவா மாகாணத் தலைநகர் பெஷாவரில் பாதுகாப்பு மிகுந்த பகுதியிலுள்ள மசூதியில் ஞாயிற்றுக்கிழமை மதியம் தொழுகை நடைபெற்றது.

இதன்போது, தற்கொலை தாக்குதல்தாரி வெடிகுண்டை வெடிக்க வைத்தார். இதில், 61 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

எனினும், மீட்பு பணிகளின் பின்னரும் படுகாயமடைந்தவர்கள் உயிரிழந்தமையாலும் இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை 100 ஆக அதிகரித்துள்ளது. இதே வேளை, காயமடைந்த நிலையில் 221 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தத் தாக்குதலை தலிபான்கள் தாங்களே நடத்தினர் என்று ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதேசமயம், குண்டுவெடிப்பை நிகழ்த்தியதாக கருதப்படும் தற்கொலைப் படை தீவிரவாதியின் துண்டிக்கப்பட்ட தலையை மீட்பு அதிகாரிகள் நேற்றுமுன்தினம் மீட்டுள்ளதாகத் தெரிவித் துள்ளனர்.

(ஐ)

# பறவை காய்ச்சல் தொற்று பிரிட்டனில் மிகத் தீவிரம்!

பிரித்தானியாவில் உள்ள நீர் நாய்கள் மற்றும் நரிகள் உட்பட பாலூட்டிகளில் மிகப்பெரிய பறவைக் காய்ச்சல் தொற்றுப் பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இந்த நோய் சுமார் 208 மில்லியன் பறவைகளின் மரணத்திற்கு வழிவகுத்துள்ளன. பாலூட்டிகளில் குறைந்தது 200 தொற்றுகள் பதிவு செய்யப்பட் டுள்ளன.

பாலூட்டிகளில் ஏற்படும் பிறழ்வு மனிதர்களுக்குத் தாண்டுவதைக் காணலாம் ஆனால் பொதுமக்களுக்கு ஏற்படும் ஆபத்து மிகக் குறைவு என்று பொது சுகாதார மேலாளர்கள் எச்சரிக்கின்றனர்.

இப்போது பிரித்தானியாவில் வைரஸால் பாதிக்கப்பட்ட விலங்குகள் மற்றும் மனிதர்களின் இலக்கு கண்காணிப்பு மற்றும் சோதனைகள் இருக்கும்.

பிரித்தானியா பாதுகாப்பு முகவரகம் இன்னும் பறவைக் காய்ச்சல் முதன்மையாக பறவைகளின் நோய் என்று அறிவுறுத்துகிறது, ஆனால் உலகெங்கிலும் உள்ள வல்லுநர்கள் இது மற்ற உயிரினங்களுக்கு பரவுவதால் ஏற்படும் அபாயங்களைப் பார்க்கிறார்கள்.

# கொரியத் தீபகற்பத்தை அமெரிக்கா ஆயுத களஞ்சியமாக மாற்றுகின்றது

## வடகொரியா குற்றச்சாட்டு



பியொங்யாங், பெப். 04

கொரிய தீபகற்பத்தை அமெரிக்கா போர் ஆயுதக் களஞ்சியமாக மாற்றுவதாக வடகொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட வட கொரிய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட கொரிய வெளியுறவு அமைச்சகத்தின் அடையாளம் தெரியாத செய்தித் தொடர்பாளரால் இது கூறப்பட்டுள்ளது.

‘நட்பு நாடுகளின் பயிற்சிகளின் விரிவாக்கம் கொரிய தீபகற்பத்தை பெரிய போர் ஆயுதக் களஞ்சியமாகவும் மிகவும் முக்கியமான போர் மண்டலமாகவும் மாற்ற அச்சுறுத்துகிறது.

மிகப்பெரும் அணுசக்தியுடன் நட்பு நாடுகளின் எந்தவொரு குறுகிய கால அல்லது நீண்ட கால இராணுவ சவாலையும் எதிர்கொள்ள வடகொரியா தயாராகவுள்ளது.

அமெரிக்கா மற்றும் அதன் அடிமைப் படைகளின் பொறுப்பற்ற இராணுவ மோதல் சூழ்ச்சிகள் மற்றும் விரோதச் செயல்கள் காரணமாக கொரிய தீபகற்பம் மற்றும் பிராந்தியத்தில் இராணுவ மற்றும் அரசியல் நிலைமை தீவிர சிவப்புக் கோட்டை எட்டியுள்ளது.

அணுவாயுதத்திற்கான அணுகுண்டு மற்றும் ஒரு முழுமையான மோதலுக்கு ஒரு முழுமையான மோதல் என்ற கொள்கையின் அடிப்படையில், அமெரிக்காவின் எந்தவொரு இராணுவ முயற்சிக்கும் வடகொரியா கடுமையான எதிர்வினையை எடுக்கும்.

கொரிய தீபகற்பம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் அமெரிக்கா தொடர்ந்து மூலோபாய சொத்துக்களை அறிமுகப்படுத்தினால், வடகொரியா அதன் இயல்புக்கு ஏற்ப அதன் தடுப்பு நடவடிக்கைகளை தவறாமல் தெளிவு படுத்தும்’ என்று செய்தித் தொடர்பாளர் கூறினார்.

வட கொரியா பல தசாப்தங்களாக தென் கொரியாவுடன் அமெரிக்காவின் ஒருங்கிணைந்த இராணுவ பயிற்சிகளை ஒரு சாத்தியமான படையெடுப்பிற்கான ஒத்திகை என்று விபரித்துள்ளது. இருப்பினும் நட்பு நாடுகள் அந்த பயிற்சிகளை தற்காப்பு என்று விவரித்துள்ளன.

பல ஆண்டுகளாக குறைக்கப்பட்டிருந்த பெரிய அளவிலான பயிற்சியை நேச நாடுகள் மீண்டும் தொடங்கியதால் வடகொரியா கடந்த ஆண்டு தனது சொந்த ஆயுத இருப்புகளை அதிகரித்தது.

வட கொரியாவின் நடவடிக்கைகள் ஏவுகணை மற்றும் பீரங்கி ஏவுகணைகளை உள்ளடக்கியது. இது தென் கொரியா மற்றும் அமெரிக்க இலக்குகள் மீது உருவகப்படுத்தப்பட்ட அணு ஆயுத தாக்குதல்கள் என்று விவரிக்கப்பட்டது.

(அ)




# இலங்கை கபடி அணியின் தலைவராக அஸ்லம் சஜா

நிந்தவூர், பெப். 04

இலங்கை கபடி அணியின் தலைவராக நிந்தவூரைச் சேர்ந்தவரும் மதீனா விளையாட்டுக் கழக தலைமை வீரருமான அஸ்லம் சஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விளையாட்டு அமைச்சில் அண்மையில் நடைபெற்ற தெரிவின்போது அஸ்லம் சஜாவின் தலைமை பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்லம் சஜா தலைமையிலான அணி எதிர்வரும் மார்ச் 11ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை பங்களாதேஷ் நாட்டில் நடைபெறும் பங்கபந்து சர்வதேச கபடி சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ளும்.

மேற்படி அணியில் நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட வீரர்களான ஸபிஹான், முஹம்மட் நப்ரீஸ் ஆகிய இரு வீரர்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இலங்கை விளையாட்டுத் துறையில் தேசிய அணி ஒன்றுக்கு நிந்தவூரைச் சேர்ந்த வீரர் ஒருவர் தலைவராக தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

# பாகிஸ்தான் பயிற்றுநராக யசிர் அரபாத் நியமனம்!

கராச்சி, பெப். 04

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சு பயிற்றுநராக முன்னாள் வீரர் யசிர் அரபாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

40 வயதான யசிர் அரபாத் பாகிஸ்தான் அணிக்காக 2000 முதல் 2012 வரை 3 டெஸ்ட், 11 ஒருநாள், 13 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். தற்போது, பாகிஸ்தான் அணியின் புதிய பந்துவீச்சுப் பயிற்றுநராக யசிர் அரபாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் இயக்குநராக மிக்கி ஆர்துர் விரைவில் நியமிக்கப்படவுள்ளார். அவர் அணியில் இல்லாதபோது தற்காலிகப் பயிற்றுநராக யசிர் அரபாத் செயல்படுவார் எனத் தெரிகிறது.

இங்கிலாந்தின் கவுன்டி அணி மற்றும் ஹொங்கொங் அணி ஆகியவற்றின் பயிற்றுநராக யசிர் அரபாத் பணியாற்றியுள்ளார்.

ஒருநாள் உலகக் கிண்ணம், பாகிஸ்தான் அணியின் அவுஸ்திரேலியச் சுற்றுப்பயணம் ஆகியவற்றில் பாகிஸ்தான் அணிக்கு உறுதுணையாக மிக்கி ஆர்துர் இருப்பார் என்று கூறப்படுகிறது.





# இங்கிலாந்து தொடரில் ஜேமிசன் பங்கேற்பார்!

வெலிங்டன், பெப். 04

நியூசிலாந்தின் சகலதுறை வீரர் கைல் ஜேமிசன் காயம் காரணமாக பல போட்டிகளை தவறவிட்டிருந்தார்.

காயத்திலிருந்து மீண்டுள்ள அவர், ஜனவரி முதல் நியூசிலாந்தில் உள்ளூர் போட்டிகளில் விளையாடி வருகிறார். இந்நிலையில், சொந்த மண்ணில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்குத் தெரிவாகியுள்ளார்.

இது தொடர்பில் அந்த அணியின் பயிற்றுநர் ஹாரிஸ்டட் கூறுகையில், நல்ல உடல் தகுதியை அடைந்து தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகிறார் ஜேமிசன். அடுத்த வாரம் இங்கிலாந்துக்கு எதிரான பயிற்சி ஆட்டத்திலும் விளையாடவுள்ளார் என்று கூறினார்.

இதனிடையே, கடந்த 2021ஆம் ஆண்டு றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி ஜேமிசனை 15 கோடி இந்திய ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தது.

இந்நிலையில் கடந்த ஆண்டு ஜூன் முதல் அவர் போட்டிகளில் ஆடவில்லை. ஆனாலும், இந்த ஆண்டுக்காக அவரை ஒரு கோடி இந்திய ரூபாய்க்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தெரிவு செய்துள்ளது. மீண்டு வந்துள்ள ஜேமிசன் ஐ. பி. எல். தொடரிலும் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)



# மகளிர் ஐ. பி. எல். தொடர் 13இல் வீராங்கனைகள் ஏலம்!

மும்பை, பெப். 04

வீராங்கனைகள் ஏலம் மும்பையில் வருகிற 13ஆம் திகதி நடைபெறும் என்று தகவல் வெளியாகி இருக்கிறது. மும்பை, இந்திய கிரிக்கெட் சபை சார் பில் ஐ.பி.எல். பாணியில் முதலாவது பெண்கள் பிறீ மியர் லீக் இருபது - 20 கிரிக்கெட் போட்டி மும்பை யில் மார்ச்சில் நடத்தப்படுகிறது.

இந்த போட்டிக்கான 5 அணிகள் ஏற்கனவே ஏலம் விடப்பட்டு விட்டன. இந்த நிலையில் இந்த போட்டிக்கான வீராங்கனைகள் ஏலம் மும்பையில் வருகிற 13ஆம் திகதி நடைபெறும் என்று தகவல் வெளியாகி இருக்கிறது. (ஐ)

# பாரிஸ் ஒலிம்பிக் 2024: ரஷ்யா பங்கேற்பதை 40 நாடுகள் எதிர்க்கும்?



வார்ஷோ, பெப். 04

பாரிஸ் 2024 ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் ரஷ்யர்களுக்கு பங்குபற்ற அனுமதி வழங்கப்படுமாயின் அதனை 40 நாடுகள் எதிர்ப்பதுடன் அவை ஒலிம்பிக் விளையாட்டு விழாவை பகிஷ்கரிக்கக்கூடும் என போலந்து எதிர்பார்க்கிறது.

ரஷ்யா மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகளின் விளையாட்டு வீரர்களை பாரிஸ் 2024 ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் பங்குபற்றச் செய்தால் பல நாடுகள் அதனை எதிர்க்கும் என எதிர்பார்ப்பதாக போலந்து விளையாட்டுத்துறை அமைச்சர் காமில் போர்ட்னிக்ஸூக் தெரிவித்தார்.

“அடுத்த வாரம் 40 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கூடி இந்த விடயம் தொடர்பாக ஓர் உறுதியான முடிவை எடுக்கும் என கருதுகிறேன்“ என தேசிய தொலைக்காட்சி சேவைக்கு அவர் கூறியுள்ளார்.

பாரிஸ் 2024 ஒலிம்பிக் தொடர்பாக ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் பெப்ரவரி 10ஆம் திகதி காணொலி அழைப்பு மூலம் கலந்துரையாடவுள்ளனர்.

இதேவேளை, ஒலிம்பிக் அரசியல் மயமாக்கப்படக் கூடாது என குறிப்பிட்டுள்ள ரஷ்யா, தமது நாட்டின் மீதான சகல கட்டுப்பாடுகளையும் நீக்கவேண்டும் எனவும் கோரியுள்ளது.

ரஷ்யர்களை நடுநிலையான போட்டியாளர்களாக ஒலிம்பிக்கில் பங்குபற்றச் செய்வதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்ந்துவருவதாக சர்வதேச ஒலிம்பிக் குழு தெரிவித்துள்ளது.

# பிரான்ஸ் லீக் உதைபந்து; பி. எஸ். ஜி. அணி வெற்றி

பாரிஸ், பெப். 04

பிரான்ஸின் லீக் 1 உதைபந்தாட்டப் போட்டியில் பாரிஸ் சென் ஜெர்மைன் (பி. எஸ். ஜி.) அணி 3-1 என்ற கோல் கணக்கில் மான்ட்பெல்லியரை வீழ்த்தியது.

நட்சத்திர வீரர் எம்பாபே 2 பெனால்டி உதை வாய்ப்பை தவறவிட்ட நிலையில் காயமடைந்து வெளியேறினார். எம்பாபே இல்லாத நிலையில் பி. எஸ். ஜி. அணியினர் முதல் பாதியில் தடுமாறினர். இந்நிலையில், இரண்டாம் பாதி தொடக்கத்தில் பி. எஸ். ஜி. வீரர் பேபியன் ரூய்ஸ் 52ஆவது நிமிடத்தில் முதல் கோலடித்தார்.

தொடர்ந்து நட்சத்திர வீரர் லயனல் மெஸ்ஸி 72ஆவது நிமிடத்தில் கோலடிக்க 2-0 என பி. எஸ். ஜி. முன்னிலை பெற்றது.



மான்ட்பெல்லியர் அணி தரப்பில் அமட் நார்ட்டின் 89ஆவது நிமிடத்தில் கோலடித்தார்.

கூடுதல் நிமிடத்தில் பி. எஸ். ஜி. வீரர் வாரென் எமிரி கோலடிக்க பி. எஸ். ஜி. 3-1 என வென்றது. (ஐ)

# ஊழல்கள், மோசடிகளில் ஈடுபட்ட உள்ளூராட்சி சபைகள் கலைப்பு!

## உள்ளூராட்சி அமைச்சு தீர்மானம்

கொழும்பு, பெப். 04

**ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபடும் உள்ளூராட்சிச் சபைகளை உடனடியாக கலைக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.**

சில உள்ளூராட்சி சபைகள் தொடர்பான ஊழல், மோசடி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அவை தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்தார்.

விசாரணைகள் நிறைவடைந்த உள்ளூராட்சிச் சபைகள் தொடர்பான அறிக்கையை வழங்குமாறு புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமைவாக உள்ளூராட்சி மன்றங்களைக் கலைப்பதற்கு சட்ட ஆலோசனை மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த நான்கு வருடங்களில் பல உள்ளூராட்சிச் சபைகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அதற்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும்,

விசாரணைகள் நிறைவடைந்த உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

உள்ளூராட்சிச் சபைகளை கலைக்கும் அதிகாரம் மாகாண ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமைவாக ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான உள்ளூராட்சிச் சபைகளை கலைப்பது தொடர்பாக ஆளுநர்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர் அல்லது மேயர் மாத்திரம் மோசடி மற்றும் ஊழல் செய்திருந்தால் அவர் பதவியில் இருந்து நீக்கப்படுவார் என்றும், முழு சபையின் அங்கீகாரத்துடன் ஊழல் மோசடி இடம்பெற்றிருந்தால், முழு சபையுமே கலைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)



# ரூ.1000 நாணய குற்றி வெளியிடப்பட்டது!

கொழும்பு, பெப். 04

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 1000 ரூபா நாணயக்குற்றி ஒன்று இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ளது.

முதலாவது நாணயக்குற்றி கண்டியில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் வைத்து மத்திய வங்கி ஆளுநரால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் 71 ஆவது ஞாபகார்த்த நாணயக் குற்றி இதுவாகும்.

பொதுமக்கள் பாவனைக்கு விடப்படாத இந்த நாணயக் குற்றி மார்ச் மாதம் முதல் பொதுமக்களின் கைகளுக்கு கிட்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசியக் கொடி நாணயத்தின் நடுவில் பொறிக்கப்பட்டுள்ளதுடன், "75" என்ற இலக்கமும் அதில் பொறிக்கப்பட்டுள்ளது. (அ)

# டலஸ், ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்டோருக்கு வேட்டு வைக்க தயாராகிறது மொட்டு

கொழும்பு, பெப். 04

கட்சியை விட்டுச் சென்றவர்களை கட்சியிலிருந்து விலக்குவது தொடர்பில், தேவையான சட்டபூர்வ ஆலோசனைகளை பெற்று வருவதாக பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன மற்றும் அதனோடு கூட்டிணைந்துள்ள கட்சியின் முக்கியஸ்தர்களுடன் இடம்பெற்ற முக்கிய பேச்சுவார்த்தையிலே, அவர் இவ்வாறு கூறினார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு:-

கேள்வி : கட்சியை விட்டுச் சென்றவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதா?

பதில் : அவர்கள் அனைவரும் கட்சியிலிருந்து விலக்கப்படுவார்கள்.

கேள்வி : அவ்வாறானால் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், டளஸ் அழகப்பெரும ஆகியோரும் விலக்கப்படுவார்களா?

பதில் : ஆம். அனைவர் தொடர்பிலும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்காக, நாம் மேற்கொண்டுள்ள செயற்பாடுகளுக்கு தேவையான சட்ட ஆலோசனையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கேள்வி : கட்சியை விட்டு விலகியவர்களின் பதவிகளுக்கு புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா? கட்சியின் தலைவரும் நியமிக்கப்பட்டுள்ளாரா?

பதில் : ஜீ.எல்.பீரிஸ் கட்சியைவிட்டு சென்றதால் கட்சிக்கு எந்தப் பாதிப்பும் கிடையாது. வெற்றியீட்டிக் கொள்ளக்கூடிய சிறந்த தரப்பு எம்மிடமுள்ளது. நாம் தேர்தலுக்கான பிரசாரங்களை ஆரம்பித்துள்ளோம்.

வாக்கு எண்ணும் போது, யார் வெற்றி பெற்றார்கள் என்பது தெரிய வரும் - என்றார். (அ)

# சிறையில் வைத்து என்னை கொலை செய்யத் திட்டம்!

## வசந்த முதலிகே குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 04



சிறைச்சாலையில் இருந்த தம்மைக் கொலை செய்ய திட்டமிடப்பட்டதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு, என்னைக் கொலை செய்யும் நோக்கமே இருந்தது. விஜேவீர மற்றும் விஜயகுமாரதுங்க ஆகியோருக்கு ஏற்பட்ட நிலைமையே எனக்கும் ஏற்படும் என பொலிஸ் அதிகாரியொருவர் என்னை எச்சரித்தார்.

என்னை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமல், நீதிக்கு புறம்பாக தடுத்து வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்தனர். வாகனத்தில் கடத்திச் சென்று மறைவான இடத்தில் வைத்து துன்புறுத்தினர் - என்றார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 167 நாட்களாக சிறையில் வைக்கப்பட்டிருந்த வசந்த முதலிகே பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சுதந்திர தின நிகழ்வுக்காக இலங்கை வந்துள்ள வெளியுறவு அமைச்சர்கள்!



கொழும்பு, பெப். 04

பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் நேற்றுமுன்தினம் இலங்கை வந்தடைந்தனர்.

உத்தியோகபூர்வ விஜயமாக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்று முன் தினம் மாலை வந்தடைந்த பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஏ.கே. அப்துல் மொமென் மற்றும் நேபாள வெளியுறவு அமைச்சர் கலாநிதி பிமலா ராய் பௌத்யல் ஆகிய இருவரையும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் வரவேற்றார்.

இன்று நடைபெறவுள்ள இலங்கையின் 75ஆவது சுதந்திர தின பிரதான நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும் வகையிலேயே இவர்கள் நாட்டுக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வீடொன்றிலிருந்து சகோதரிகளின் சடலங்கள் மீட்பு!

கொழும்பு, பெப். 04

தெரணியகல, மல்தெனிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மர்மமான முறையில் உயிரிழந்ததாக சந்தேகிக்கப்படும் வகையில் சகோதரிகள் இருவரின் சடலங்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரணியகல பொலிஸார் தெரிவித்தனர்.

உல வல்பொல ரலால பகுதியைச் சேர்ந்த திமுத வசந்தி (வயது-51) மற்றும் முதிதா லக்மாலி (வயது-49) ஆகிய இருவரின் சடலங்களே மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இதேவேளை, குறித்த வீட்டின் இன்னொரு அறையில் 90 வயதுடைய தாயாரும் காணப்பட்ட நிலையில், அவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இரு பெண்களின் உடல்களும் துர்நாற்றம் வீசுவதாகவும், இரண்டு நாட்களுக்கு முன்பே அவர்கள் இறந்திருக்கலாம் என சந்தேகிப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு கண்டாவளையில் சிரமதானம்



கிளிநொச்சி, பெப். 04

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சுத்தமானதும், பசுமையானதுமான நகரத்தை தீர்மானிக்கும் வேலைத்திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கண்டாவளை பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன் தலைமையில் பரந்தன் சந்தியில் குறித்த பணி முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, கரைச்சி பிரதேச செயலாளர் ஜெயகரன் தலைமையில், டிப்போ சந்தியிலிருந்து ஏ-9 வீதியின் இருமருங்கும் துப்பரவு செய்யப்பட்டது.

குறித்த பணியில், பிரதேச செயலகம், பொலிஸ் திணைக்களம், சுகாதார சேவைகள் திணைக்களம், இளைஞர் சேவைகள் மன்றம் உள்ளிட்ட பல திணைக்களங்கள் இணைந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 22, 23...

வழங்கப்படவுள்ளது.

இந்நிலையில், தேர்தலை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு மேற் கொண்டு வருகின்றது. இதன் ஓர் அங்கமாகவே தபால் மூல வாக்களிப்பு திகதியை தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## 75ஆவது...

மைத்திரி விக்கிரமசிங்க அணிவகுப்பை ஏற்றுக் கொள்வர்.

மரியாதை அணிவகுப்புக்களில் முப்படையினர், பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் , ஓய்வுபெற்ற முப்படை வீரர்கள், அங்கவீனமுற்ற முப்படையின் முன்னாள் வீரர்கள், தேசிய மாணவர் படையணி என்பவற்றைச் சேர்ந்த 6,410 பேர் பங்குபற்றவுள்ளனர்.

சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பற்றீஷியா ஸ்கொட்லன்ட் உள்ளிட்ட 400 இராஜதந்திரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

2019 ஆம் ஆண்டின் பின்னர், இம் முறையும் தமிழில் தேசிய கீதத்தை இசைக்கப்படவுள்ளது.

இதேவேளை சுதந்திர தினமான 04 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக இடம் பெறும் ஜனாதிபதியின் விசேட உரை நிகழ்த்தப்படமாட்டாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. (ஐ)

## இன்று...

சமதையாக மன்னார், வவுனியா மாவட்டங்களிலிருந்தும் பேரணிகள் ஆரம்பமாகவுள்ளன. இந்தப் பேரணிகள் கிளிநொச்சியில் நாளை இணைந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணமாகி திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தை அடையும்.

**பேரணி பயணம்**

யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி நாச்சிமார் கோயிலடி ஊடாக பிரதான தபால் அலுவலகம் தமிழாராய்ச்சி நினைவிடம், மணிக்கூட்டுக் கோபுரம், ஆஸ்பத்திரி வீதி வழியாக கச்சேரியடியை அடைந்து அங்கிருந்து செம்மணியை சென்றடையும். செம்மணியிலிருந்து வாகனங்கள் மூலம் நாவற்குழி, சாவகச்சேரி, கொடிகாமம், மிருசுவில், பளை, ஆனையிறவு, பரந்தன் ஊடாக கிளிநொச்சியை சென்றடைந்து இரணைடுவில் பேரணியின் முதல் நாள் நிறைவடையும்.

இரண்டாம் நாளான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பரந்தனில் ஆரம்பமாகும். வவுனியா மன்னார் அணிகளை இணைத்துக் கொண்டு 10.30 மணிக்கு புறப்படும் பேரணி புளியம்பொக்கணை, தர்மபுரம், விசுவமடு, உடையார்கட்டு, மூங்கிலாறு ஊடாக புதுக்குடியிருப்பை அடைந்து அங்கிருந்து முள்ளிவாய்க்கால் சென்று உறுதியெடுத்துக் கொண்டு முல்லைத்தீவில் நிறைவடையும்.

மூன்றாம் நாளான திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு முல்லைத்தீவில் ஆரம்பமாகும் பேரணி தென்னமரவாடியூடாக திருகோணமலையை மதியம் 1.30 மணியளவில் சென்றடையும். பின்னர், திருகோணமலையின் எழுச்சி நிகழ்வுகளில் பேரணியினர் பங்கேற்பர். தொடர்ந்து பயணித்து வெருகலில் மூன்றாம் நாள் நிறைவடையும்.

நான்காம் நாளான செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பேரணி வெருகலிலிருந்து ஆரம்பமாகி வாகரை சென்று அங்கிருந்து மட்டு. நகரை சென்றடையும். இதேநேரம் அம்பாறை மாவட்டத்திலிருந்தும் பேரெழுச்சியாக மக்கள் வந்து இணைந்து மாபெரும் பொது கூட்டத்துடன் எழுச்சிப் பேரணி நிறைவு பெறும். (ஐ)

## 13ஆம்...

13இற்கு எதிர்ப்பானவர்கள் நேற்றைய தினம் கொழும்பில் செய்தி யாளர் சந்திப்புகளை நடத்தினர். இதில், கருத்துரைத்த சரத் வீரசேகர எம். பி., "இந்தியாவின் கடும் அழுத்தத்தால் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார். பிரபாகரன் ஆயுதமேந்திய நோக்கத்தை பேனாவால் வழங்க ஒருபோதும் இடமளிக்க முடியாது. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டாம் என மகாசங்கத்தினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தமாக அறிவுறுத்தியுள்ளார்கள் - என்றார்.

இதேசமயம், பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில், "அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தேவையா, இல்லையா என்பதை தீர்மானிக்கும் உரிமை நாட்டு மக்களுக்கு உள்ளதே தவிர ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அந்த அதிகாரம் இல்லை. 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமாயின் மக்கள் வாக்கெடுப்பு அல்லது ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும். சுபீட்சமான கொள்கை திட்டத்திற்கு அமையவே ஜனாதிபதி செயற்பட வேண்டும் - என்றார்.

இதேபோன்று, அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சாதிய அடிப்படையில் முரண்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் தோற்றம் பெறும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு எதிராக ஒட்டுமொத்த மக்களும் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கூறியுள்ளார். (ஐ)

## 108 ஏக்கர்...

விடுவிக்கப்பட்டன.

காணிகளை விடுவிக்கும் சம்பிரதாயபூர்வ நிகழ்வு நேற்று பலாலி அன்ரனிபுரத்தில் நடைபெற்றது. இதில், யாழ். மாவட்ட படைகளின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ண போதோட்ட யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரனிடம் அதற்கான ஆவணத்தைக் கையளித்தார்.

இராணுவத்தின் பிடியிலிருந்த 80 ஏக்கர் காணிகளும் கடற்படையின் ஆதிக்கத்திலிருந்த 28 ஏக்கர் காணிகளுமாக 108 ஏக்கர் காணிகள் இவ்வாறு விடுவிக்கப்பட்டன. காங்கேசன்துறை - மத்தி (ஜே 234) - 50.59 ஏக்கர், மயிலிட்டி - வடக்கு (ஜே 246) - 16.55 ஏக்கர், தென்மயிலை (ஜே 240) - 0.72 ஏக்கர், பலாலி - வடக்கு (ஜே 254) - 13.033 ஏக்கர், நகுலேஸ்வரம் (ஜே 226) -28 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்றத்துக்காக 130 குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

இதேசமயம், விடுவிக்கப்பட்ட காணிகளில் 13 ஏக்கர் அரச காணியாகும். இந்த காணி வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து 5 இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருக்கும் 75 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

அத்துடன், மீள்குடியேறும் குடும்பங்களுக்கு தேவையான உதவிகளை வழங்கவும் காணிகளை துப்புரவு செய்வதற்கு நிதியுதவி அளிக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் காணி விடுவிப்பு நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், வடமாகாண சபை அவைத்தலைவர் சீ. வி. கே. சிவஞானம், மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு பிரதம செயலாளர் மற்றும் அதிகாரிகள் பொதுமக்கள், படை அதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# மாணவர்களின் பேரணியை வலுப்படுத்த கலந்துரையாடல்!

மட்டக்களப்பு, பெப். 04

வடக்கு, கிழக்கில் இன்றைய தினம் நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கும் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமாகும் பேரணிக்கும் வலுச்சேர்க்கும் விதமான ஏற்பாடுகள் நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றன.

யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பமாகும் பேரணி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பை அடையும். அன்றைய தினம் போராட்டத்துக்கு வலுச்சேர்ப்பது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகள், விவசாய அமைப்புகள், ஏனைய அமைப்புகள் அத்தோடு அரசியல் கட்சிகளுடன் நேற்று கலந்துரையாடல் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பேரணி மட்டக்களப்பை வந்தடையும் அதேசமயம், அம்பாறையில் அன்று - செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகும் பேரணியும் மட்டக்களப்பு மாநகரை வந்தடையும்.

நேற்றைய கலந்துரையாடலில் பங்கேற்ற கோவிந்தன் கருணாகரம் எம். பி. கருத்துரைக்கையில்,

"தமிழ் மக்களுக்கு இதுவரை சுதந்திரம் கிடைக்கப் பெறாமல் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு எதிராக 75ஆவது சுதந்திரத்தை ஒரு கரி நாளாக அனுஷ்டிப்பதற்கு தீர்மானித்திருக்கின்றோம்.

வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிவில் சுகமாக அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெறவிருக்கும் ஆர்ப்பாட்ட பேரணி மட்டக்களப்பை வந்தடைய இருக்கின்றது. இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஆதரவை வழங்குவதற்கு நாங்கள் தீர்மானித்து இருக்கின்றோம் - என்றார்.

தர்மலிங்கம் கிருபாகரன், முன்னிலை சோசலிச கட்சியின் உறுப்பினர் கருத்துரைக்கையில், "இந்த அடக்குமுறை அரசுக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்பை காட்ட வேண்டும் என ஒழுங்கு செய்யப்படுகின்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.", என்றார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன்,

75ஆவது சுதந்திர தினம் அரசாங்கத்துக்கு கொண்டாட்டமாக இருந்தாலும் தமிழ் மக்களுக்கு 75 வருடங்களும் ஒரு திண்டாட்டத்துக்குரிய தினமாக காணப்படுகின்றது. எனவே இந்த 75ஆவது சுதந்திரத்தை கரி நாளாக அனுஷ்டிக்க வேண்டும். நாங்கள்படுகின்ற வேதனைகளை, எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை வெளிப்படுத்த கட்சி அரசியலுக்கு அப்பால் பட்ட முறையில் உணர்வுள்ள தமிழர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.", என்றார்.

இவர்கள் தவிர, சமூக அமைப்புகள், சமூகப் பிரதிநிதிகள் எனப் பலரும் பங்கேற்று போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக கருத்துரைத்தனர்.

(ஐ)

## பொருளாதார...

தொடர்பில் செய்தியாளர்களுக்குக் கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "காலிமுகத்திடல் போராட்டத்தால் மகிந்த ராஜபக்ஷவின் பெயருக்கு ஏற்பட்ட சேதம்தான் எங்களுக்குக் கவலை. அவருக்கு அந்த நிலை ஏற்பட்டிருக்கக்கூடாது. கோட்டாபய அரசாங்கத்தில் நிறைய தீர்மானங்களில் மகிந்த சம்பந்தப்பட்டிருக்கவில்லை. பொருளாதார வீழ்ச்சி உள்ளிட்ட பிரச்னைகளுக்கெல்லாம் அவர் பொறுப்புக் கூறத் தேவையில்லை - அதுதான் அரசியல்.

நல்ல விமர்சனங்களை மட்டும் எதிர்பார்க்கக்கூடாது. அப்படியானவர்களால் அரசியல் செய்ய முடியாது. எமது அரசியல் வரலாற்றில் இவ்வாறான பல நிகழ்வுகளை நாம் கடந்து வந்துள்ளோம். இவ்வாறான எல்லா சவால்களையும் எதிர்கொள்ள நான் தயார். நல்லாட்சியிலும் நான் பல சவால்களை எதிர்கொண்டேன். என்னை மூன்று தடவைகள் சிறையில் போட்டார்கள்.

எம்மை அடித்து - கொலை செய்து - வீடுகளுக்கு தீ வைத்து - அச்சமூட்டி எமது அரசியல் பயணத்தை நிறுத்த முடியாது. அரசியல் அதிகாரம் இருப்பது மக்களின் கைகளில். நாங்கள் அரசியலில் இருக்க வேண்டுமா, இல்லையா என்று அவர்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.

காடைத்தனம் ஊடாக எம் அரசியல் பயணத்தைத் தடுக்க முடியாது. நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன வெற்றியடைந்தே தீரும்" - என்றார். (ஐ)

## வடக்கு...

இன்றைய தினம் நாட்டின் 75ஆவது சுதந்திர தினமாகும். இந்த நாளை கரி நாளாகக் கடைப்பிடிக்குமாறு முன்னரே பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் அழைப்பு விடுத்திருந்தனர். இந்த நிலையில், தமிழ் மக்கள் - தாயகம் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்குமுறை - ஆக்கிரமிப்பு என்பவற்றுக்கு எதிராகவும் இராணுவம் வெளியேற வேண்டும், சுயநிர்ணய உரிமை வேண்டும் என்று வலியுறுத்தி பொருளாதார பிரச்னையால் நடக்கும் தீர்வு பேச்சு எனும் போலி நாடகத்தை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தும் முகமாக இன்றைய தினம் வடக்கிலிருந்து கிழக்குக்கு பேரணி ஒன்று மாணவர்கள் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில், இன்றைய தினம் வடக்கு - கிழக்கு தழுவிய ஹர்த்தாலுக்கு நேற்று முன்தினம் அழைப்பு விடுத்திருந்தனர். இவர்களின் இந்தக் கோரிக்கைக்கு தொழில்சங்கங்கள், வர்த்தகர் சங்கங்கள், அரசியல் கட்சிகள் எனப் பல தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 13ஐ மாற்ற...

தலையீட்டை இந்திய அரசாங்கம் மேற்கொள்ளவேண்டுமென பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டு கிளை தலைவர் கே. அண்ணாமலை உள்ளிட்ட சிலர் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கரிடம் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை அரசாங்கம் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று இந்தியா தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது.

இந்த நிலையில், இந்திய மத்திய இணை அமைச்சர் கலாநிதி எல்.முருகன், பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுக்கிளையின் முன்னாள் தலைவர்களான சி. பி. ராதாகிருஷ்ணன், பொன் ராதா கிருஷ்ணன் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட் டுக்கிளை தலைவர் கே. அண்ணாமலை ஆகியோர் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரை சந்தித்துள்ளனர்.

இதன்போது இலங்கையில் 13ஆவது திருத்தத்தை எவ்வித மாற்றமுமின்றி உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான தலையீட்டை இந்திய அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கடிதம் மூலம் கோரியுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அமெரிக்கா துள்ளிக்குதிக்காது இலங்கைக்கு உதவவேண்டும்!

## விக்டோரியா நூலண்டுக்கு சீனா பதிலடி



பீஜிங், பெப். 04

**இலங்கையுடனான சீனாவின் நெருங்கிய ஒத்துழைப்பைக் கண்டு துள்ளிக் குதிப்பதை விட, அமெரிக்காவும் சில நேர்மையைக் காட்டலாம். தற்போதைய சிரமங்களில் இலங்கைக்கு உதவ ஏதாவது செய்யலாம் என சீன வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கைக்கு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு சீனா போதியளவு உதவி செய்யவில்லை என அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான துணை இராஜாங்க செயலாளர் விக்டோரியா நூலண்ட் தெரிவித்த கூற்றை சீனா மறுத்துள்ளது.

இந்த வார தொடக்கத்தில், இலங்கையில் இருந்த அமெரிக்க வெளியுறவுத்துறை துணைச் செயலாளர் விக்டோரியா நூலண்ட், இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் பிணை எடுப்புத் தொகையைத் திறக்க உதவுவதற்காக, மற்ற கடனாளிகளுடன் சேர்ந்து சர்வதேச நாணய நிதியத்துக்கு சீனா நம்பகமான மற்றும் குறிப்பிட்ட உத்தரவாதங்களை வழங்கவேண்டும் என அமெரிக்கா விரும்புகிறது என்று கூறினார்.

இந்த கூற்றுக்கு பதிலளித்துள்ள சீனாவின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மாவோ நிங்-


அமெரிக்கா கூறியது உண்மையை பிரதிபலிக்கவில்லை. சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கி, கடனை நிலைநிறுத்துவதற்கான ஆதரவை வெளிப்படுத்தும் கடிதத்தை இலங்கைக்கு ஏற்கனவே வழங்கியுள்ளது. அதற்கு இலங்கை சாதகமாக பதிலளித்து, சீனாவுக்கு நன்றி தெரிவித்துள்ளது.

இலங்கையுடனான சீனாவின் நெருங்கிய ஒத்துழைப்பைக் கண்டு துள்ளிக் குதிப்பதை விட, அமெரிக்காவும் சில நேர்மையைக் காட்டலாம். தற்போதைய சிரமங்களில் இலங்கைக்கு உதவ ஏதாவது செய்யலாம்.

நட்புறவு கொண்ட அண்டை நாடு மற்றும் உண்மையான நண்பன் என்ற வகையில், சீனா இலங்கை எதிர்கொள்ளும் சிரமங்களையும் சவால்களையும் உன்னிப்பாக அவதானித்து, அதன் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான உதவிகளை எங்களால் முடிந்தளவுக்கு வழங்கி வருகிறோம்.

தொடர்புடைய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதற்கு சீனா தயாராக இருக்கிறது. இலங்கை நிலைமையை வழிநடத்துவதற்கும், அதன் கடன் சுமையை குறைப்பதற்கும், நிலையான அபிவிருத்தியை அடைய உதவுவதற்கும் சாதகமான பங்களிப்பை வழங்குவதற்கு சீனா தயாராக இருக்கிறது- என்றார். (அ)

## நித்திய இளைப்பாறுதல் அடைந்தார் ஓய்வு நிலைப் பேராயர் ஒஸ்வால்ட்!



கொழும்பு, பெப். 04

கொழும்பு மறைமாவட்டத்தின் ஓய்வு பெற்ற பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை நித்திய இளைப்பாறுதல் அடைந்தார்.

90 வயதான கலாநிதி ஒஸ்வால்ட் கோமிஸ், கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று அதிகாலை நித்திய இழைப்பாறுதல் அடைந்தார்.

கலாநிதி ஒஸ்வால்ட் கோமிஸ் கொழும்பு பல்கலைக் கழகத்தின் வேந்தராகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சுதந்திர தின கொண்டாட்டத்தை புறக்கணிக்கும் சஜித் பிரேமதாஸ!



கொழும்பு, பெப். 04

இன்று சனிக்கிழமை காலிமுகத் திடலில் நடைபெறும் சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்வதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தீர்மானித்துள்ளார்.

நாட்டில் நிலவும் மோசமான பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு, பணத்தை விரயம் செய்யும் சந்தர்ப்பங்களில் பங்குபற்றுவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் இன்று சனிக்கிழமை காலிமுகத்திடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## டலஸும் பங்கேற்கமாட்டார்

கொழும்பு, பெப். 04

இன்று சனிக்கிழமை இலங்கையின் 75ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்களில் பங்கேற்கப்போவதில்லை என அரசாங்கத்திலிருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துடன் உடன்பட முடியாத காரணத்தினால் தான் சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்கப் போவதில்லை என அவர் கூறினார். (அ)

## சகல மருத்துவமனைகளிலும் மருந்து தட்டுப்பாடு அதிகரிப்பு

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்



கொழும்பு, பெப். 04

நாட்டின் மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாடுகள் நாளாந்தம் அதிகரித்து வருகி றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் இரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

இவ்வாறான மருந்து தட்டுப்பாடுகள் காரணமாக பல மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அரசாங்கம் உடனடியாக இதனை கருத்தில் கொள்ளவேண்டும். அத்துடன் தொழில் வல்லுநர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரியை மாற்றி அமைக்கப்படும் வரையில் தமது போராட்டம் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக அடுத்த வாரம் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடுவதற்காக அரச மருத்துவ அதிகாரிகள் சங்க கோரிக்கை விடுத்துள்ளதாகவும் இதன்போது மருந்து தட்டுப்பாடு மற்றும் வரி வசூலிப்பு முறை தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## மரண அறிவித்தல்



### திருமதி பூமணி இரத்தினம்

யாழ். புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டன் East Ham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பூமணி இரத்தினம் கடந்த 28-01-2023 சனிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் – ஆசைப்பிள்ளை தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான குமாரு – செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினம் (சிவம் ஸ்டோர்ஸ் இரத்தினபுரி நகை கடை உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தம்பியையா, பொன்னுத்துரை, கந்தையா, முத்துக்குமாரு ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலநாதன்(நெதர்லாந்து), யோகநாதன்(நெதர்லாந்து), புவனா(சுவிஸ்), சிவநாதன்(சுவிஸ்), புஷ்பம்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,சுரேஷ், ரஞ்சினி, ரஞ்சினி, உமாமகேஸ்வரன், சுகுமார், ரதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜானன், கீர்த்திகா, பிரஞ்சன், நிலானி, ஆகாஷ், அபர்ணியா, லாவணியா, பிரவீன், லவீனா, சகீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் நாளை (05.02.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11.30 மணியளவில் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## 9 ஆம் திகதி தேர்தல் நடக்கும் பிரசாரத்துக்கு தயாராகுங்கள்

### பஸில் ராஜபக்ஷ பணிப்பு

கொழும்பு, பெப். 04

“மார்ச் 9 ஆம் திகதி உள்ளாட்சி மன்ற தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். அதனை எதிர்கொள்வதற்கு தயாராகுங்கள்.”

- இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ஷ, அனைத்து தொகுதி அமைப்பாளர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார் என்று இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.